வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P .1632

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு

விலை ரூ. 30/=




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 05 | 16.09.2024 திங்கட்கிழமை | இதழ் : 260 | பக்கங்கள் : 12

# உயிர் அச்சுறுத்தலுக்கான பதிலை வாக்களிப்பில் வெளிப்படுத்துங்கள்

## அரியநேத்திரன் கோரிக்கை



யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 16

**மக்கள்தான் எனது பாதுகாப்பு என தமிழ் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரன் தெரிவித்துள்ளார். அத்துடன், வேட்பாளர்களில் எனக்கு மாத்திரம் இந்த அச்சுறுத்தல் உள்ளதாக தெரிவிக்கப்பட்டு பொலிஸாரால் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இதனை மக்கள் சிந்தித்து வாக்களிப்பு மூலம் அதற்கான பதிலை வழங்கவேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.**

ஜனாதிபதி வேட்பாளர்களில் தனக்கு மாத்திரம் ஏன் அச்சுறுத்தல் கடிதம் வரவேண்டும் என்பதை மக்கள் சிந்திக்க வேண்டும் எனவும் இதற்கான பதிலை மக்கள் வாக்களிப்பின் மூலம் வெளிப்படுத்த வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழ் பொது வேட்பாளர் பா. அரியநேத்திரனின் உயிருக்கு ஏதேனும், அச்சுறுத்தல் ஏற்படக்கூடும் என பிரதிப் பொலிஸ் மாஅதிபரால் கடிதம் ஒன்று அனுப்பப்பட்ட நிலையில் குறித்த கடிதம் தொடர்பில் தெளிவுபடுத்துகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (அ)

# தியாகி திலீபனின் நினைவு ஆரம்பம்

## நல்லூர் நினைவிடத்தில் நேற்று சுடரேற்றி அஞ்சலி




யாழ்ப்பாணம், செப். 16

ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து உண்ணாவிரதம் இருந்து உயிர்நீத்த தியாகி திலீபனின் 37ஆவது ஆண்டு நினைவு தினம், நேற்று யாழ்ப்பாணம், நல்லூர் பகுதியில்

11

# அரியநேத்திரனுக்கு உயிர் அச்சுறுத்தல்!

## பாதுகாப்பில் கவனம் செலுத்துமாறு பொலிஸார் அனுப்பினர் அவசர கடிதம்



கொழும்பு, செப். 16

தமிழ் பொதுவேட்பாளர் பா. அரியநேத்திரனுக்கு உயிர் அச்சுறுத்தல் அபாயமுள்ளதால், அவர் தனது பாதுகாப்பில் அக்கறையெடுக்க வேண்டுமென குறிப்பிட்டு பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஒருவரால் கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் எஸ். எம். வை. செனவிரட்னவால் சிங்களத்தில் குறித்த கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இம்முறை தேர்தலில் அரியநேத்திரன் மீதான மக்கள் செல்வாக்கின் நிமித்தம் உயிருக்கு

11

# கடைசி கட்ட கட்சி தாவல்களால் பரபரப்பாகவுள்ளதாம் கொழும்பு

கொழும்பு, செப். 16

ஜனாதிபதி தேர்தல் களம் சூடுபிடித்துள்ள நிலையில், கடைசி கட்ட தாவல் எதிர்வரும் 17 மற்றும் 18ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளதென தெரியவருகின்றது.

இதன்படி ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் சஜித் பக்கம் தாவவுள்ளனர் எனவும், சஜித் கூட்டணியில் உள்ள மாகாண மட்டத்திலான அரசியல் பிரமுகர்கள் சிலர் ஜனாதிபதி பக்கம் சாயவுள்ளனர் எனவும் அறியமுடிகின்றது.

இதற்கான பேச்சுகள் எல்லாம் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளன எனக் கொழும்பு அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

அத்துடன், ஜனாதிபதி தேர்தலில் டம்மி வேட்பாளர்களாக களமிறக்கப்பட்ட சிலரும் பிரதான வேட்பாளர்களை ஆதரிக்கும் அறிவிப்பை கடைசி நேரத்தில் வெளியிடுவதற்கு தயாராகி வருகின்றனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (அ)

# ஜனாதிபதித் தேர்தல் தமிழ் அரசு இன்று விசேட அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 16

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக விசேட அறிக்கையொன்றை இன்று திங்கள்கிழமை இலங்கைத் தமிழரசுக் கட்சி வவுனியாவில் வைத்து வெளியிடவுள்ளது.

இந்த விசேட அறிக்கையை கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா,

11

# வல்லிபுர ஆழ்வாருக்கு இன்று தேர்

வடமராட்சி, செப். 16

சரித்திரப் பிரசித்தி பெற்ற வடமராட்சி துன்னாலை சிறீ வல்லிபுர ஆழ்வார் ஆலய பெருந்திருவிழாவில் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழா

11

# இலங்கை மீதான தீர்மானத்தின் அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

## வியாழனன்று இணையனுசரணை நாடுகள் ஆராய்வு

ஜெனிவா, செப். 16

பிரிட்டன் தலைமையில் அமெரிக்கா, கனடா, மாலாவி, வட மசிடோனியா மற்றும் மொன்டினீக்ரோ ஆகிய இணையனுசரணை நாடுகளின் ஏற்பாட்டில் இலங்கை தொடர்பான 51/1 தீர்மானத்தைக் காலநீடிப்பு செய்வது குறித்தும், அதற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்தும் எதிர்வரும் 19 ஆம் திகதி ஆராயப்படவுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 57 ஆவது கூட்டத்தொடர் கடந்த திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமானது. அன்றைய தினம்

11

# மாகாண சபை தேர்தல் விரைவில் நடத்தப்படும்

யாழ்ப்பாணம், செப். 16

ஜனாதிபதியாக பொறுப்பேற்று மிகக் குறுகிய காலத்தில் மாகாண சபை தேர்தல் நடத்தப்படும் என ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மானிப்பாயில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தல் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாகாண சபை தேர்தலை மிகக் குறுகிய காலத்தில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதோடு அதன் அதிகாரங்களை மத்திய அரசாங்கத்துக்கு எடுத்துக்கொள்ள மாட்டேன் என்ற உத்தரவாதத்தை இங்கே அளிக்கிறேன்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களை முன்னிலைப்படுத்தி சர்வதேச நன்கொடையாளர் மாநாட்டை மிகவிரைவில் நடத்துவேன்.

தொழில் வாய்ப்பற்றிருக்கும்

11

# நாட்டில் அவசரநிலை ஏற்படும் சாத்தியம்?

கொழும்பு, செப். 16

ஜனாதிபதித் தேர்தல் திகதி மற்றும் முடிவுகள் அறிவிக்கப்படும்போது நாட்டில் ஏற்படக்கூடிய எந்தவொரு அவசர நிலையையும் எதிர்கொள்வதற்காக பொலிஸாரையும் ஆயுதப்படையினரையும் இணைத்து "அவசர கால திட்டம்" ஒன்றை தயாரிப்பதற்கு ஜனாதிபதி பாதுகாப்பு பிரதானிகளுக்கு அனுமதியளித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

11

# அடுத்த ஜனாதிபதியுடன் அமெ. இணைந்து பணியாற்றத் தயார்!

கொழும்பு, செப். 16

இலங்கை வாக்காளர்கள் தமது நாட்டை எதிர்காலத்தில் வழிநடத்த தேர்வு செய்யும் வேட்பாளருடன் இணைந்து பணியாற்றுவதற்கு அமெரிக்கா எதிர்பார்த்துள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஜனநாயக தினத்தைக் குறிக்கும் வகையில் அவர் தனது எக்ஸ் தளத்தில் இதனைப்

11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் நடக்க முன்னரே பிரதமர் பதவிக்கு போட்டி

## சஜித் கட்சிக்குள் இருவரின் பெயர்கள்

கொழும்பு, செப். 16

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னதாகவே ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பிரதமர் பதவிக்கான போட்டி ஆரம்பித்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் பொதுச் செயலாளரான ரஞ்சித் மத்துமபண்டாரவின் பெயரும், கண்டி மாவட்ட எதிர்க்கட்சியின் பிரதம அமைப்பாளருமான லக்ஷ்மன் கிரியெல்லவின் பெயரும் தற்போது வரையில் முன்வைக்கப்பட்டுள்ளன.

சஜித் வெற்றி பெற்றால் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார பிரதமராக வேண்டும் என கட்சியின் பல பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

மற்றுமொரு குழு உறுப்பினர்கள் கிரியெல்லவுக்கு ஆதரவளித்து வருகின்றனர்.

இதேவேளை, இவர்கள் இருவருக்குமிடையே தேவையற்ற போட்டி ஏற்பட்டால், இந்த பதவி மற்றுமொரு சிரேஷ்ட உறுப்பினருக்கு வழங்கப்படலாம் எனவும் தகவல் வெளியாகியுள்ளது. (அ)

# அமைதியான முறையில் புலமைப்பரிசில் பரீட்சை!

கொழும்பு, செப். 16

ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை அமைதியான முறையில் இன்று காலை ஆரம்பமானதாகப் பரீட்சை ஆணையாளர் அமித் ஜயசுந்தர தெரிவித்தார்.

பரீட்சை தொடர்பான எந்தவித முறைகேடுகளும் பதிவாகவில்லை எனவும், திட்டமிட்டவாறு தடங்கலின்றி உரிய நேரத்தில் சகல பரீட்சை நிலையங்களில் பரீட்சை ஆரம்பிக்கப்பட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

ஏதுவான காலநிலை நிலவியமையால் சகல மாணவர்களும் எவ்வித சிக்கலுமின்றி பரீட்சை எழுதியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

2,849 பரீட்சை நிலையங்களில் நேற்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமான தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பிற்பகல் 12.15 வரை நடைபெற்றது.

இந்த பரீட்சைக்கு இம்முறை 3,20,879 மாணவர்கள் தோற்றினரென பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

# இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சியைப் பதிவு செய்தது

கொழும்பு, செப். 16

2024 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் இலங்கையின் பொருளாதாரம் 4.7 வீத வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டிற்கான தேசிய கணக்கு மதிப்பீடுகளை வெளியிட்டு மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விவரவியல் திணைக்களம் இதனை வெளிப்படுத்தியுள்ளது.

அதன்படி, 2023 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது நிலையான விலையில் (2015) 2,644,240 மில்லியன் ரூபா ஆகும்.

எனினும், தற்போது அது 2,768,293 மில்லியனாக ரூபாவாக அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டில் விவசாய நடவடிக்கைகள், தொழில்துறை பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் சேவைப் பொருளாதார நடவடிக்கைகள் முறையே 1.7 வீதம், 10.9 வீதம் மற்றும் 2.5 வீதம் வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளதாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

### 4 ஆயிரத்தை கடந்தன தேர்தல் முறைப்பாடுகள்

கொழும்பு, செப். 16

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை 4,031 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் வரை தேர்தல் ஒழுங்குமுறை ஆணைக்குழுவுக்கு மொத்தம் 203 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் 3,916 முறைப்பாடுகளும் வன்முறைச் செயல்கள் தொடர்பான 29 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன என்று ஆணைக்குழுவின் அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

# மனிதர்களுக்கு போன்று நாய்க்கும் இறுதி சடங்கு



யாழ்ப்பாணம், செப். 16

வட்டுக்கோட்டை, மாவடி பகுதியில் மனிதர்களுக்கு இறுதிச் சடங்கினை செய்வது போல வளர்ப்பு நாய்க்கும் இறுதி சடங்கை செய்தமை நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பைசா என்று அழைக்கப் படும் ரொட் வீலர் இன நாய் கடந்த 20.08.2006 அன்று பிறந்துள்ளது.

இந்நிலையில், தனது 18 வயதை தாண்டிய பைசா கடந்த சனிக்கிழமை உயிரிழந்தது.

இறுதிச் சடங்கை செய்தவர் கடந்த 10 வருடங்களாக பைசாவை வளர்த்து வந்துள்ளார்.

கடந்த 10 வருடங்களாக தனக்கு பாதுகாப்பை வழங்கிய நன்றிக் கடனுக்காக மனிதர்களுக்கு செய்கின்ற இறுதிச் சடங்குபோல பைசாவுக்கும் இறுதிச் சடங்கை நடத்தி நெகிழ வைத்துள்ளார்.

பான்ட் வாத்தியம் இசைக்க நாயின் சடலம் வட்டுக்கோட்டை எங்கும் இறுதி ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. அதன்பின்னர் பைசாவின் எஜமானின் காணியில் சடலம் அடக்கம் செய்யப்பட்டது. (அ)

# அரசியல் நலனை அடைய சிலர் வன்முறை பிரசாரம்!

## அமைதியான சூழலை குழப்பாதீர் என தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரிக்கை

கொழும்பு, செப். 16

ஜனாதிபதித் தேர்தலுக்கான அமைதியான சூழலே நாட்டில் உள்ளது. வெவ்வேறு நாடுகளில் இடம்பெற்ற வன்முறை சூழல்களை எடுத்துக் கூறி இலங்கையில் தற்போதுள்ள அமைதியான சூழலை குழப்பும் நோக்கில் யாரும் செயல்படக் கூடாது என கோரிக்கை விடுத்த தேர்தல்கள் ஆணைக்குழு, அரசியல் நலன்களை அடையவும் மக்கள் சொத்துக்களை கொள்ளையடிக்கும் நோக்கிலும் சிலர் அநாவசியமான பிரசாரங்களை முன்னெடுப்பதாகவும் தெரிவித்தது.

ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ள நிலையில் புதன்கிழமையுடன் வேட்பாளர்களின் பிரசார கூட்டங்கள் நிறைவு பெறுகின்றன. இவ்வாறானதொரு நிலையில், ஜனாதிபதித் தேர்தல் குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் சமன் சிறீ ரத்நாயக்க தெரிவிக்கையில்-

2024 ஜனாதிபதித் தேர்தல் பாதுகாப்பு கடமைகளுக்காக சுமார் 70 ஆயிரம் பொலிஸார் மற்றும் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இராணுவத்தை நேரடியாக தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுப்படுத்தாவிடினும் வழமை போல நாடளாவிய ரீதியில் இராணுவத்தினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர். அமைதியானதும் சுதந்திரமானதுமான வாக்களிப்புக்கான சூழல் நாட்டில் உள்ளது.

எனவே, ஊரடங்கு சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டிய தேவை ஏற்படாது என்றே கருதுகின்றோம். ஊடகங்களிலும் சமூக ஊடங்களிலுமே வன்முறைக்கான சூழல் தூண்டப்படுகின்றது. அவற்றை கண்காணித்து வருகின்றோம். இல்லாத விடயத்தை ஏன் ஏற்படுத்த முயற்சிக்கின்றனர் என்று தெரியவில்லை. வன்முறைகளை உருவாக்க வேண்டாம் என்றே அனைத்து தரப்பினரிடமும் கேட்டுக்கொள்கின்றோம்.

பொது மக்களுக்கு தேர்தல் குறித்தும் தேசிய அரசியல் மற்றும் வாக்களிப்பு தொடர்பிலும் போதிய அறிவற்றல் உள்ளது. இதன் பிரகாரம் எதிர்வரும் சனிக்கிழமை மக்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு சென்று ஜனாதிபதி தெரிவுக்கான தமது ஜனநாயக கடமைகளை நிறைவேற்றுவார்கள். அத்தகைய அமைதியான சூழலே நாட்டில் உள்ளது. வெவ்வேறு நாடுகளில் இடம்பெற்ற வன்முறைச் சூழல்களை எடுத்துக் காட்டி இலங்கையில் தற்போதுள்ள அமைதியான சூழலை குழப்பும் நோக்கில் சிலர் கருத்துக்களை கூறி வருகின்றனர்.

அரசியல் நலன்களை அடையவும் மக்கள் சொத்துகளைக் கொள்ளையடிக்கும் நோக்கிலுமே இவ்வாறான கருத்துக்களை பரப்புபவர்களின் நோக்கமாக உள்ளது-என்றார். (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
16.09.2024 திங்கட்கிழமை
குரோதி வருடம், ஆவணி 31

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் அரசு கட்சியின் உண்மை முகம் என்ன?

இலங்கை தமிழ் அரசு கட்சியின் உத்தியோகபூர்வ முடிவை அதன் மத்திய குழு அறிவித்திருந்தது. ஆனால், கட்சியின் மாவட்டமட்ட உறுப்பினர்கள் பலர் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கின்றனரென அறிவித்ததுடன், தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவான பிரசாரங்களை முன்னெடுத்து வந்தனர். ஆனால், கட்சியின் உத்தியோகபூர்வ முடிவை வெளிப்படையாக எதிர்க்காமலும் - அதேவேளை தங்களை தமிழ்த் தேசியத்துக்கு ஆதரவாகவும் காண்பித்துக் கொண்டனர். இந்த நிலையில் தமிழ் அரசு கட்சியை தீர்மானிக்கும் நபரான எம். ஏ. சுமந்திரன் தமிழ் பொது வேட்பாளரை தொடர்ச்சியாக எதிர்த்து வந்தார். தோற்கடிக்கப் போவதாகவும் கூறியிருந்தார்.

இந்த நிலையிலேயே தனது செல்வாக்கைக் கொண்டு கட்சியை சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவாக மாற்றினார். இதனோடு உடன்பாடு இல்லை என்றவர்களும் வெளிப்படையாக தமிழ் தேசியப் பொதுக் கட்டமைப்பின் மேடைகளில் ஏறவில்லை. இந்தநிலையில் கட்சியின் முடிவுக்கு அமைவாக சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவான பிரசாரக் கூட்டத்தில் சுமந்திரன் பேசியிருக்கின்றார். தமிழ் அரசுக் கட்சி சஜித் துடன்தான் என்பதை காண்பித்ததுடன், சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவாகப் பிரசாரங்களையும் மேற்கொள்வோம் என்பதையும் வெளிப்படுத்தியிருக்கின்றார்.


தமிழ் பொது வேட்பாளரை வெளிப்படையாக எதிர்க்கும் சுமந்திரன் - வெளிப்படையாக சஜித்தின் மேடையில் நிற்கின்றார். ஆனால், தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பதாகக் கூறும் சிறீதரனோ வெளிப்படையாக தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பின் மேடைகளில் இதுவரையில் தோன்றவில்லை. தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பதாகக் கூறும் தமிழ் அரசு கட்சியினர் சுமந்திரனை கண்டு அஞ்சுகின்றனரா அல்லது தமிழ் அரசு கட்சியும் தமிழ்ப் பொது வேட்பாளருடன் நிற்பதான தோற்றத்தை காண்பிப்பதற்காக நடிக்கின்றனரா? இதில் எது உண்மை?

தமிழ் அரசுக் கட்சி ஒரு பெரிய கட்சி - பாரம்பரிய கட்சி - என்றெல்லாம் கூறிக்கொண்டு தமிழ் மக்களை ஏமாற்றும் வகையில் செயலாற்றுவதை நிறுத்த வேண்டும். ஒன்றில் பொது வேட்பாளரை ஆதரிப்பதாயின் வெளிப்படையாக அதற்கான பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டும். வெறுமனே இணைய ஊடங்கங்களிலும் யூ-ரியூப்பிலும் பேசிவிட்டால், தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பதாக அர்த்தமல்ல. மாறாக, தமிழ்ப் பொது வேட்பாளரை நோக்கி மக்களை வாக்களிக்கத் தூண்டும் நோக்கில் பிரசாரங்களை மேற்கொள்ள வேண்டும். தங்களின் பாராளுமன்ற தேர்தலின்போது, எவ்வாறு வாக்குகளை திரட்ட பணியாற்றுவார்களோ அதே ஆர்வத்தோடும் - அர்ப்பணிப்போடும் உழைக்க வேண்டும்.

ஏனெனில், இது ஊர் கூடித் தேர் இழுக்க வேண்டிய விடயம். ஆனால், அந்தத் தேரை இழுப்பதை நாங்கள் குழப்பியே ஆவோம் என்பதுதான் சுமந்திரனின் நிலைப்பாடு. சுமந்திரனின் நிலைப்பாடு எதுவோ அதுதான் தற்போது தமிழ் அரசு கட்சியின் நிலைப்பாடாகவும் இருக்கின்றது. அப்படியில்லை என்றால் தமிழ் பொது வேட்பாளரை ஆதரிப்பாகக் கூறும் தமிழ் அரசு கட்சியினர் வீட்டைவிட்டு வெளியில் வரவேண்டும் - இல்லாவிட்டால் சுமந்திரனிடம் தோல்வியடைய வேண்டும். அவ்வாறில்லாது தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்றும் வகையில் செயல்படக்கூடாது. சொந்த மக்களுக்கு உண்மையாக இருப்பதற்கான பொறுப்பை தமிழ் அரசு கட்சி வெளிப்படுத்த வேண்டும்.

# வங்கக்கடலில் அவதரித்த எங்கள் வல்லிபுர மாயவனுக்கு இன்று தேர்த் திருவிழா!

- புலோலியூர் வேல்நந்தகுமார்



வங்கக்கடலில் அவதரித்தவன் வல்லிநாச்சியார் கனவில் தோன்றியவன். சக்கரத்தாழ்வாராய் துன்னாலை வல்லிபுர பதியில் உறைந்து நம்பிவரும் நல்மாற்றம் தருகின்ற நம் வல்லிபுர மாயவனுக்கு இன்று தேர்த்திருவிழா ஊர் கூடி தேர் இழுத்தல் என்பதற்கு அமைய வல்லிபுர மாயவனை நம்பி வருகின்ற எல்லா ஊரவரும் சேர்ந்து வடம் பிடித்து இழுத்து வர காத்தல் கடவுளாம் கண்ணபிரான் இன்று அழகிய சித்திரத் தேரிலே ஆரோகணித்து வல்லிபுர மணல்வெளியில் மக்கள் வெள்ளம் அலைமோத இன்று தேரிலே பவனி வருகிறான்.

பஞ்ச கிருத்தியங்களிலே தேர்த்திருவிழா அழித்தல் தொழிலைக் குறிக்கின்றது. காத்தல் கடவுள் எம்மை சூழ்ந்து வருத்தும் துயரங்களையெல்லாம் அழிப்பதற்கு தேரில் வருகிறான். இலங்கையின் பல பாகங்களிலும் இருந்து அடியவர்கள் எல்லாம் வந்து ஒன்றுகூடி கோவிந்தா கோபாலா பரந்தாமா என்று அவன் புகழ் பாடி தேரில் இருக்கும் அற்புத காட்சியை கண்ணாரக் காண்போம்.

வல்லிபுரக் கோவில் திருவிழா என்பதும் பக்தர் தம் மனங்களிலே குதூகலத்தை ஏற்படுத்தும் ஒரு திருவிழாக்காலமாகவே அமைகிறது. அதிலும் குறிப்பாக நேற்றைய சப்பறத்திருவிழா இன்றைய தேர்த்திருவிழா நாளைய தீர்த்தத்திருவிழா, மறு நாளைய பட்டுத்தீர்த்தத்திருவிழா அனுமார் மடை என்பன இவ் ஆலயத்தின் சிறப்பு திருவிழாக்களாக அமைகிறது. வெள்ளிப்பாதசரம் என்ற சிறுகதையில் இலங்கையர்கோன் அவர்கள் வல்லிபுரக் கோவில் திருவிழாவை களமாகக் கொண்டு அற்புதமான சிறுகதை ஒன்றைப் படைத்துள்ளார்.

குருக்கட்டு விநாயகர் அருகமைந்திருக்கின்ற சிறப்பும் வல்லிபுரப்பதிக்குண்டு அவ் வண்ய குருக்கட்டு விநாயகரை வழிபட்டு, பின்னர் வல்லிபுர் மாயவனை வழிபடுகின்ற வழிபட்டுச் சிறப்பும் வல்லிபுரப்பதிக்குண்டு. அவ்வகையில் குருக்கட்டு விநாயகரை வழிபட்டு அதன் பின்னர் வல்லிபுர மாயவனை வழிபடுகின்ற வழிபாட்டுச் சிறப்பும் இதற்குண்டு.

குருக்கட்டு விநாயகரைத் தேடிச் செல்லும் இரவுத் திருவிழாக் காட்சிகள் அதுபோல வெளி வீதி வலம் வரும் திருவிழாக்களிலே கண்ணனின் பல லீலைகளை நாடகமாக கற்கோவளக் கலைஞர்களின் செயல்பாடுகள் வடமராட்சி வலய பாடசாலை மாணவர்கள், வடமராட்சி பிரதேச மன்றங்களைச் சேர்ந்த கலைஞர்களின் கலைநிகழ்வுகள் என பல சிறப்பம்சங்களாலும் இத் திருவிழாக்காலம் கொண்டு விளங்குவதுடன் ஆலயத்தை சுற்றி இருக்கின்ற ஆச்சிரமங்கள் முதியோர் இல்லம் போன்றன மூலம் அடியவர் பசி போக்கும் அன்னதானப்பணி உட்பட பல ஆக்கபூர்வமான பணிகள் முன்னெடுக்கப்படுவதும் சிறப்புக்குரியது. ஞாயிற்றுக்கிழமைகளில் மாயவனின் விசேட நாட்களில் மாமிசம் தவிர்த்து வந்து வழிபடும் வடமராட்சி பிரதேச வாழ் மக்கள் கொண்டிருப்பதும் சிறப்பு.

இத்தகைய பல சிறப்புக்களோடு சிவாச்சாரியார்களது சிறப்பான பூசை வழிபாடுகளும் பரிபாலன சபையினருடைய சிறப்பான செயற்பாடுகளும் ஒன்று சேர ஆண்டு தோறும் வேண்டுதல்களை மாயவன் தேரில் வருகின்ற திருக்காட்சியை எண்ணும் போது தொண்டர் அடிப்பொடி ஆழ்வாரின் பின்வரும் பாடல்தான் நினைவுக்கு வரும்.

"வல்லிபுர மாயவன் தேரில் வருகிறான்
தொல்லையெல்லாம் போக்கவே நேரில் வருகிறான்
எல்லையில்லா பக்தி வெள்ளத்திலே
வங்கக் கடல் நாயகன் எங்கள் மாயவன்
பங்கமின்றி என்றும் காக்க தேரில் வருகிறான்."

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்ரெம்பர் - 16 திங்கட்கிழமை
குரோதி வருடம் - ஆவணி 31
நல்ல நேரம் : 06.00 - 07.30
ராகு காலம் : 07.30 - 09.00
திதி : சதுர்த்தசி




**மேடம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வியாபாரத்தில் பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். புது அதிகாரி உங்களை மதிப்பார்.

**இடபம்**
கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். ஊழியர்கள் உதவுவார்கள் மகிழ்ச்சிகரமான நாள்.

**மிதுனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் உணர்ச்சிவசப்படமால் அறிவுப்பூர்வமாக முடிவெடுக்கப் பாருங்கள். உத்தியோகத்தில் தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்கப் பாருங்கள். கவனம்தேவைப்படும் நாள்.

**கடகம்**
பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி உண்டு. வியாபாரத்தில் புது வேலையாட்கள் அமைவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள்.

**சிம்மம்**
குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பிரபலங்களால் ஆதாயம் அடைவீர்கள். அரசால் அனுகூலம் உண்டு. உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார்.

**கன்னி**
குடும்ப வருமானத்தை உயர்த்த முற்படுவீர்கள். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். அக்கம் - பக்கம் வீட்டாரின் அன்பு தொல்லை குறையும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

**துலாம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந்திப்பீர்கள். தாய்வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். உத்தியோகத்தில் மறுக்கப்பட்ட உரிமைகள் கிடைக்கும். உழைப்பால் உயரும் நாள்.

**விருட்சிகம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உறுதுணையாக இருப்பார்கள். வியாபாரத்தில் சில மாற்றம் செய்வீர்கள். தலைமைக்கு நெருக்கமாவீர்கள். வெற்றி பெறும் நாள்.

**தனுசு**
குடும்பத்தில் இருந்து வந்த கூச்சல் குழப்பங்கள் விலகும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உடல் நலம் சீராகும். புது வாய்ப்புகள் தேடி வரும். மனசாட்சி படி செயல்பட வேண்டிய நாள்.

**மகரம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தெரியாத சின்ன சின்ன கவலைகள் வந்து போகும். நீங்கள் ஒன்று பேசப் போய் மற்றவர்கள் அதை வேறுவிதமாகப் புரிந்துக் கொள்வார்கள். நேர்மறை எண்ணம்.

**கும்பம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னைகள் வரும். மேலதிகாரியுடன் மோதல்கள் வேண்டாம். போராடி வெல்லும் நாள்.

**மீனம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். உத்தியோகத்தில் மேலதிகாரி பாராட்டுவார். புகழ், கௌரவம் கூடும் நாள்.

# மீனவர்களுக்கு மொட்டையடித்து அனுப்பிய இலங்கை அரசை கண்டித்து ஆர்ப்பாட்டம்

இராமேஸ்வரம், செப். 16

விடுதலை செய்யப்பட்ட மீனவர்களை மொட்டையடித்து அனுப்பியதால் இலங்கை அரசைக் கண்டித்து தங்கச்சிமடத்தில் மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



இராமேஸ்வரத்தில் இருந்து கடந்த மாதம் 27ஆம் திகதி மீன்பிடிக்கச் சென்ற 8 மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் எல்லை தாண்டியதாக கைது செய்து, சிறையில் தடுத்து வைத்தனர். சிறைத் தண்டனைக்குப் பின்னர் இவர்களின் வழக்கு கடந்த 5ஆம் திகதி நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது 5 மீனவர்களை விடுதலை செய்ததுடன், தலா 50 ஆயிரம் ரூபாய் அபராதம் செலுத்தவும் உத்தரவிட்டார். மேலும் 3 மீனவர்கள் இரண்டாவது முறையாக எல்லைதாண்டி வந்ததாக கூறி ஆறு மாதங்கள் கடுங்காவல் தண்டனையும், அவர்களுக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் அபராதமும் செலுத்த உத்தரவிட்டார்.

இதனையடுத்து 3 மீனவர்களும் மீண்டும் சிறையில் அடைக்கப்பட்டனர். விடுவிக்கப்பட்ட 5 மீனவர்களுக்கு உறவினர்கள் கடன் வாங்கி பணத்தை செலுத்தியுள்ளனர். ஆனால், 6ஆம் திகதி அபராதத் தொகை செலுத்தவில்லை என சிறைத் துறையினர் அவர்களை கைவிலங்கிட்டு மொட்டை அடித்தும், இலங்கை கைதிகள் அடைக்கப்பட்டுள்ள சிறைச்சாலை கழிவறைகளை சுத்தம் செய்ய வைத்து, வளாகத்திலுள்ள கழிவுநீர் கால்வாய்களையும் சுத்தம் செய்ய வைத்து கொடுமைப் படுத்தியதாகவும், சொந்த ஊர் திரும்பிய மீனவர்கள் வேதனையுடன் தெரிவித்தனர். இந்த நிலையிலேயே இலங்கை அரசையும், மத்திய அரசையும் கண்டித்து தங்கச்சிமடத்தில் மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

# 7,616 கோடி ரூபாய் முதலீட்டில் 19 ஒப்பந்தங்கள் கையெழுத்து

## முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, செப். 16

" 7, 616 கோடி ரூபாய் மதிப்பில் 11, 516 பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கும் 19 ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அமெரிக்கப் பயணம் வெற்றிகரமாகவும், சாதனைக்கு உரியதாகவும் இருந்தது" என்று அமெரிக்க பயணத்தை முடித்துக் கொண்டு சென்னை திரும்பிய முதல்வர் மு. க. ஸ்டாலின் பெருமிதத்துடன் தெரிவித்தார்.

சென்னையில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் முதல்வர் கூறியவை வருமாறு, அமெரிக்காவில் அரசு முறை பயணத்தை முடித்துக் கொண்டு சென்னை திரும்பியுள்ளேன். இது வெற்றிகரமான, சாதனைக்குரிய பயணமாக அமைந்துள்ளது. உலக நாடுகளில் உள்ள தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் தங்கள் தொழில் முதலீடுகளை செய்ய வைப்பதற்கான முயற்சியாக, கடந்த ஓகஸ்ட் 28ஆம் திகதி அமெரிக்கா சென்றேன். செப்.12 வரை அங்கு இருந்துள்ளேன். உலகின் புகழ்பெற்ற தலைசிறந்த 25 நிறுவனங்களைச் சேர்ந்தவர்களை சந்தித்தேன்- என்றார்.

# தமிழகத்தில் தேசிய மக்கள் நீதிமன்றம் ரூ. 682 கோடி இழப்பீடு வழங்க உத்தரவு

## 69, 212 நிலுவை வழக்குகளுக்கு தீர்வு

சென்னை, செப். 16

தமிழகம் முழுவதும் நடைபெற்ற தேசிய மக்கள் நீதிமன்றத்தில் 69 ஆயிரத்து 212 நிலுவை வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டன. இதன்மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு சுமார் 682 கோடி ரூபாய் இழப்பீடு வழங்க உத்தரவிடப்பட்டது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் 1,022 வழக்குகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 149 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டன. இதன்மூலம் 18. 85 கோடி ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டது. மதுரை அமர்வில் 356 வழக்குகள் எடுத்துக் கொள்ளப்பட்டு 30 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டன. மொத்தம் 4 கோடி ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டது.

தமிழகம் முழுவதும் நடைபெற்ற தேசிய மக்கள் நீதிமன்றத்தில் மொத்தம் 69, 212 வழக்குகளுக்கு தீர்வு காணப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு சுமார் 682 கோடி ரூபாய் இழப்பீடு வழங்கப்பட்டது. (எ)

# "அழைத்தாலும் அழைக்காவிட்டாலும் மது ஒழிப்புக்கு பா. ம. க. ஆதரவளிக்கும்"

மதுரை, செப். 16

திருமாவளவன் அழைத்தாலும், அழைக்காவிட்டாலும் வி. சி. கவின் மது ஒழிப்பு மாநாட்டை பா. ம. க. ஆதரிக்கும் என்று அந்தக் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்தார். பா. ம. க. தலைவர் அன்புமணி ராமதாஸ் மதுரை விமான நிலையத்தில் நேற்று [illegible] பா. ம. க. சமூக நீதிக்காக தொடங்கப்பட்ட கட்சி.

மது ஒழிப்புக்காகவும், நேர்மையான ஆட்சிக்காகவும் போராடி வரக்கூடிய கட்சி பா.ம.க. இப்படி எத்தனையோ சாதனைகள் செய்த கட்சியை திருமாவளவன் தொடர்ந்து அவதூறு செய்து வருகிறார். அதனை அவர் தவிர்க்க வேண்டும்.

மதுவை ஒழிக்க வேண்டும் என்பது அனைவரின் விருப்பம். இந்தியாவில் எந்த கட்சி, மது ஒழிப்புக்கு எதிராக கூட்டம், மாநாடு நடத்தினாலும் நாங்கள் ஆதரிப்போம். அந்த அடிப்படையில் திருமாவளவன் மது ஒழிப்பு மாநாட்டுக்கு எங்களை அழைத்தாலும் அழைக்காவிட்டாலும் நாங்கள் அந்த மாநாட்டை ஆதரிக்கிறோம். மது ஒழிப்பு எங்கள் கட்சியின் அடிப்படை கொள்கை- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் பிரசார நிறைவின் பின் சமூகவலைத்தளங்கள் முடக்கம்?

கொழும்பு, செப். 16

**ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரம் முடிவடைந்த பின்னர் 48 மணித்தியாலங்கள் சமூக வலைத்தளங்களை முடக்க தேர்தல்கள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.**

எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில், பிரசாரங்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி நள்ளிரவுடன் நிறைவடைகின்றன.

இந்நிலையில், 19 ஆம் மற்றும் 20 ஆம் திகதிகளில் எவ்வித தேர்தல் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படாத நிலையில் சமூக ஊடகங்களில் சேறு பூசுவதை நிறுத்துவதற்காக குறித்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணைக்குழு மற்றும் சமூக ஊடக வலையமைப்பை சேர்ந்த நிறுவனங்களுடன் இணைந்து இந்தத் திட்டத்தை கவனம் செலுத்தியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த காலப்பகுதியில் பிரசாரம் செய்வது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளபோதிலும் சமூக வலைத்தளங்கள் ஊடாக பிரசாரம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

சமூக ஊடகக் குழுக்களுடன் கலந்தாலோசித்த பின்னர் அமைதியான காலத்தில் தேர்தல் பிரசாரம் மற்றும் அவதூறு பரப்புரைகளை நிறுத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீவிர முயற்சிகளை மேற்கொள்ளும் என ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை செய்த கணவன்

களுத்துறை, செப். 16

தனிப்பட்ட தகராறு காரணமாக கணவன் தனது மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கிக் கொலை செய்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை வாத்துவ பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொதுப்பிட்டிய பிரதேசத்தில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றது.

கோரகஹவத்த, பொதுப்பிட்டிய பிரதேசத்தை சேர்ந்த 23 வயது பெண்ணே கொலை செய்யப்பட்டார்.

பெண் ஒருவர் தனது கணவரால் தாக்கப்படுவதாக 119 தகவல் நிலையத்தின் மூலம் வாத்துவ பொலிஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதன்படி சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டதில் பெண் ஒருவர் உயிரிழந்ததை அவதானித்தனர். மற்றுமொரு பெண் காயமடைந்து களுத்துறை நாகொட மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பொலிஸார் நடத்திய விசாரணையில் காயமடைந்தவர் உயிரிழந்தவரின் சகோதரி என்பது தெரியவந்துள்ளது.

கொலையை செய்த 34 வயதுடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், வாத்துவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# நம்பகத்தன்மையுடன் தேர்தல் நடத்த தயார்!

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, செப். 16

ஜனாதிபதித் தேர்தலை சுதந்திரமாகவும் நீதியாகவும் நம்பகத்தன்மையுடனும் நடத்துவதற்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயத்தில் சட்ட ரீதியாக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்த சுற்றறிக்கைகள், அறிவுறுத்தல்கள், பணிப்புரைகளை வெளியிட்டுள்ளதோடு அது குறித்து பொதுமக்களையும் வெகுஜன ஊடகங்கள் ஊடாக அறிவுறுத்தியுள்ளதாகவும் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

எனினும், தேர்தல் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்கு புறம்பாக பல்வேறு தரப்பினரும் அமைப்புகளும் தேர்தல் செயன்முறை தொடர்பில் குறிப்பாக வாக்கு அடையாளமிடப்படும் விதம், வாக்குகளையும் விருப்புகளையும் எண்ணும் விதம், தேர்தல் சட்டங்களை வலுவாக்கம் செய்தல் மற்றும் பிரசார நடவடிக்கைகள் சார்ந்த பணிகள் குறித்து தெரிவிக்கும் கூற்றுகளும் அபிப்பிராயங்களும் ஊடகங்கள் வாயிலாக பிரசாரம் செய்யப்படுவதை அவதானிக்க முடிவதாக ஆணைக்குழு கூறியுள்ளது.

இவ்வாறான விடயங்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ அறிவித்தல் அல்லவெனவும் அவ்வாறான கூற்றுகள் எவையும் செல்லுபடி அற்றவை எனவும் அவை தொடர்பான பொறுப்பு தமது ஆணைக்குழுவுக்கு இல்லை எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதனால் தேர்தல்கள் ஆணைக்குழு ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான அனைத்து விடயங்கள் மற்றும் பணிகள் தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவிப்பதால் வேறு நபர்களும் அமைப்புகளும் வெளியிடும் கருத்துகளையும் அறிவுறுத்தல்களையும் பொருட்படுத்த வேண்டாமென ஆணைக்குழு மக்களை கேட்டுக்கொண்டுள்ளது. (அ)

# ஒரு வேட்பாளர் மற்றொரு வேட்பாளருக்காக பிரசாரத்தில் ஈடுபடுகின்றமை சட்ட முரண்!

## தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, செப். 16

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் ஒருவர் மற்றொரு வேட்பாளரை ஊக்குவிக்கும் வகையில் பிரசாரம் செய்வது தேர்தல் சட்டத்துக்கு முரணானதெனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர்களில் ஒரு சிலர் பிற வேட்பாளர்களுக்காக அல்லது அவர்களை ஊக்குவிக்கும் வகையில் பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதென ஆணைக்குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் முற்றிலும் தேர்தல் சட்டத்துக்கு முரணானவை. அவ்வாறு சட்ட ரீதியற்ற செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம் என ஆணைக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

சட்ட விரோதமாக பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுமிடத்து இரு தரப்பினருக்கும் எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (அ)

# மூத்த மகளை துஷ்பிரயோகம் செய்து பிணையில் வந்த தந்தை இளைய மகளையும் துஷ்பிரயோகம் செய்தார்!

வவுனியா, செப். 16

வவுனியா, ஓமந்தை பகுதியில் 15 வயதான சிறுமியொருவரை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் சிறுமியின் தந்தை பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

சிறுமி துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து, சிறுமியை மீட்ட பொலிஸார், வவுனியா பொது வைத்தியசாலையில் பரிசேதனைக்காக அனுமதித்தனர்.

பரிசோதனையிலும், சிறுமியின் வாக்குமூலத்திலும் அவர் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை உறுதியானது.

2022ஆம் ஆண்டு முதல் சிறுமியை அவரது தந்தை துஷ்பிரயோகம் செய்து வருவது தெரியவந்தது. அந்த வீட்டில் தங்கியிருந்த இளைஞர் ஒருவரும், கடந்த மாதம் 28ஆம் திகதி சிறுமியை துஷ்பிரயோகம் செய்துள்ளார்.

இதையடுத்து, சிறுமியின் தந்தையை ஓமந்தை பொலிஸார் கைது செய்தனர். இளைஞனை கைது செய்வதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட தந்தை, தனது மூத்த மகளை துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டில் 2020ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். அது தொடர்பான வழக்கு வவுனியா மேல் நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், மற்றைய மகளையும் துஷ்பிரயோகம் செய்துள்ளார். (அ)

# தேர்தலில் வாக்களிக்க விடுமுறை வழங்குக!

## பவ்ரல் அமைப்பு கோரிக்கை

கொழும்பு, செப். 16

தனியார் மற்றும் அரை அரசு நிறுவனங்களில் பணி புரியும் ஊழியர்களுக்கும் வாக்களிக்க விடுமுறை அளிக்கவேண்டும் என பவ்ரல் அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

ஒரு அமைப்பின் தலைவர் குறித்த சட்டத்துக்கு இணங்காமல், ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க மறுத்தால் அதுபற்றி பவ்ரல் அமைப்புக்கு அறிவிக்குமாறு அதன் தலைவர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிறுவனத் தலைவர் சட்டத்தின் முன் குற்றவாளி எனவும், அவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி இரண்டு இலட்சம் ரூபா அபராதமும் ஒரு மாதச் சிறைத் தண்டனையும் வழங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, அவ்வாறான சம்பவங்கள் பதிவாகினால் அது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவிக்கப்படும் எனவும் பவ்ரல் அமைப்பின் தலைவர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# வட்டக்கச்சியில் விபத்து 21 வயது இளைஞன் பலி!

கிளிநொச்சி, செப். 16

கிளிநொச்சி, ,ராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குற்பட்ட வட்டக்கச்சி சில்வா வீதியில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் 21 வயதான இளைஞன் உயிரிழந்துள்ளார்.

இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக்கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதியதினாலேயே எந்த விபத்து சம்பவித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்தில் உயிரிழந்தவர் வட்டக்கச்சி மாயவனூர் பகுதியைச் சேர்ந்த 21 வயதான கண்ணதாசன் கபிலன் எனவும், குறித்த நபர் ஒரு பிள்ளையின் தந்தை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# மிதக்கும் சூரியசக்தி கருத்திட்டம் அபிவிருத்தி செய்வதற்கு அனுமதி

கொழும்பு, செப். 16

புதுப்பிக்கத் தக்க வலுசக்தி உற்பத்தியை அதிகரிப்பதற்காகத் தற்போதுள்ள நீர்மூலங்களின் மேல் மிதக்கும் சூரியசக்தி கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு அரசாங்கம் முன்னுரிமை வழங்கியுள்ளது.

அதற்கமைய, மிதக்கும் சூரியசக்தி கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக ரந்தெணிகல, மொரகஹகந்த மற்றும் கலா வாவி ஆகிய 03 பிரதான நீர்த்தேக்கங்களை மஹாவலி அதிகார சபை அடையாளம் கண்டுள்ளது.

மேற்குறித்த இடங்கள் [illegible] மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதற்கமைய, ரந்தெணிகல, மொரகஹகந்த மற்றும் கலா வாவி ஆகிய நீர்த்தேக்கங்களில் மிதக்கும் சூரியசக்தி கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்காக முதலீட்டாளர்களைத் தெரிவு செய்வதற்கு இலங்கை மின்சார சபைக்கு அதிகாரத்தை வழங்குவதற்காக மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சஜித், அநுர மக்களிடம் மன்னிப்பு கோரவேண்டும்!

## ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, செப். 16

**பொருளாதார நெருக்கடியில் மக்களை கைவிட்டு ஓடிய சஜித்தும் அநுரவும் மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என சுயேச்சை வேட்பாளர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**



கேகாலையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசியல் மேடைகளில் நீலிக் கண்ணீர் வடிக்காமல், கடந்த பொருளாதார நெருக்கடியால் மக்கள் வரிசையில் கஷ்டப்பட்ட போது அதனைக் கண்டுகொள்ளாமல் ஓடியதற்காக சஜித்தும் அநுரவும் மக்களிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்.

நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்த்து, மக்கள் வாழக்கூடிய நாட்டை நானே உருவாக்கினேன்.

ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் இறுதி வாரத்தில் நாம் இப்போது இருக்கிறோம். இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் 38 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். அன்று மக்கள் கஷ்டப்பட்ட போது இவர்களில் யாரும் அதனைக் கண்டுகொள்ளவில்லை.

உணவு, மருந்து, எரிபொருள், எரிவாயு இன்றி மக்கள் படும் துன்பத்தையும், மாணவர்களை பாடசாலை அனுப்ப முடியாமல் தவித்ததையும் அவர்கள் கண்டுகொள்ளவில்லை.

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்த்து மக்களுக்கு நிவாரணம் அளித்து வாழ்வதற்கான நம்பிக்கையை நான் ஏற்படுத்தினேன். இன்று நாட்டின் பொருளாதாரம் ஸ்திரமடைந்துள்ளது. மக்களின் வாழ்க்கைச் சுமையை படிப்படியாக குறைத்து வருகிறோம். அதற்காக கடந்த தடவை நிவாரணம் உள்ளிட்ட திட்டங்களை செயல்படுத்தினோம்-என்றார். (அ)

# ஏமாற்று அரசியலுக்கு விரைவில் முற்றுப்புள்ளி

## ஜனாதிபதி வேட்பாளர் திலித்

கொழும்பு, செப். 16



தாம் முன்வைத்திருப்பது வாக்குறுதிப் பத்திரமல்ல, மாறாக களத்தில் யதார்த்தமாக்கக்கூடிய மூலோபாய வேலைத்திட்டத்தையே முன்வைத்திருப்பதாக சர்வஜன அதிகாரத்தின் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

அக்குரஸ்ஸ பிரதேசத்தில் நடைபெற்ற பேரணியில் கலந்துகொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இது வாக்குறுதிப் பத்திரம் அல்ல. சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலில் இவ்வாறானதொரு மூலோபாய வேலைத்திட்டம் முன்வைக்கப்படுவது இதுவே முதல் தடவை என நான் நினைக்கிறேன்.

நீங்கள் எதிர்பார்க்கும் இலங்கை எவ்வாறு உருவாகும் என்பதை இந்தப் புத்தகம் விவரிக்கிறது.

எனவே, எமக்குக் கிடைத்திருக்கும் இந்த முக்கியமான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நீங்களும் நாமும் கனவு கண்ட அபிவிருத்தியடைந்த இலங்கையை உருவாக்குவோம்.

இந்த ஏமாற்று அரசியலுக்கு எதிராக உங்கள் மனதில் உள்ள வெறுப்பையும் கோபத்தையும் முடிவுக்கு கொண்டு வரலாம்.

அதற்காக அன்பின் அடையாளமான நட்சத்திரத்தின் முன் வாக்களியுங்கள்-என்றார். (அ)

# மலையக மக்கள் ரணில் பக்கமே!

## கூறுகிறார் அமைச்சர் அலி சப்ரி



கொழும்பு, செப். 16

வடக்கு-கிழக்கில் பெருந்திரளான மக்கள் மட்டுமன்றி மலையக மக்களும் ஜனாதிபதியை வெல்லவைக்கத் தயாராக உள்ளனர். என்று அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டை பொறுப்பேற்ற போது அவரின் வீட்டிற்கு தீவைத்தனர். ஜனாதிபதி மாளிகையையும் ஜனாதிபதி செயலகத்தையும் கைப்பற்றினர். ஆனால் அவர் அச்சப்படவில்லை. மாற்றம் என்பது சட்டியிலிருந்து அடுப்பில் விழுவதல்ல.

இருக்கும் நிலையை விட உயர் நிலைக்கு வருவதில் தான் மாற்றம் இருக்கிறது. நோயை குணப்படுத்தியவரை திரும்பிச் செல்லுமாறு கூறும் எதிரணிக்கு மக்கள் நல்ல பாடம் கற்பிக்க வேண்டும்.

வடக்கு கிழக்கில் பெருந்திரளான மக்கள் மட்டுமன்றி மலையக மக்களும் ஜனாதிபதியை வெல்லவைக்கத் தயாராக உள்ளனர். ரிசாதும், ஹக்கீமும் மறு பக்கத்தை ஆதரித்தாலும் பெருந்திரளான முஸ்லிம் மக்கள் ஜனாதிபதிக்கு ஆதரவாக உள்ளனர்.

76 வருடங்களாக என்ன செய்தீர்கள் என திசைகாட்டியினர் கேட்கின்றனர். தம்புத்தேகம விவசாயின் மகனாகப் பிறந்த அநுர குமார, ஜனாதிபதி வேட்பாளராக வருவதற்கு 76 வருட சாபம் தான் காரணம்.

சாதாரண தரம் மற்றும் உயர்தரம் கற்று பல்கலைக் கழகம் சென்று கற்பதற்கு புலமைப் பரிசிலும் வழங்கி தொழிலும், பெற்றுக் கொடுப்பது எமது நாட்டில் மாத்திரம் தான். 71 ஆம் ஆண்டுபோராட்டமும் 88 - 89 வன்முறையும் செய்யாதிருந்தால் அதனைவிட சிறப்பான இடத்திற்கு சென்றிருக்கலாம். பரீட்சார்த்தம் செய்து பார்த்து இருண்ட யுகத்திற்குச் செல்ல முடியாது.

மாற்றம் வேண்டும் என இருக்கும் ஆட்சியைத் துரத்தி, கிரீஸில் புதிய அரசு ஆட்சிக்கு வந்தது. ஐஎம்.எப்பை துரத்தினர். 13 வீதமாக இருந்த வரி 23 வீதமாக வரி உயர்த்தப்பட்டது. 13 வருடங்கள் துன்பப்பட நேரிட்டது. 5 வருடங்கள் பாதி சம்பளம் தான் வழங்கப்பட்டது. நமது நாட்டிலும் டொலர் 400 ரூபாவாக உயர்ந்து, உரத் தட்டுப்பாடு ஏற்படும் மாற்றத்தையா விரும்புகிறீர்களா?"- என்றார்.

# இரத்து செய்யப்பட்டுள்ள கடனை மீளப் பெறுவோம்

## ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச



கொழும்பு, செப். 16

அரச வங்கி கட்டமைப்புக்குள் செல்வந்தர்கள் மற்றும் கோடீஸ்வரர்கள் பெற்றுக் கொண்ட கடன் இரத்து செய்யப்பட்டது. அவ்வாறு இரத்து செய்யப்பட்ட கடனை மீளப் பெறுவோம் என ஐக்கிய மக்கள் முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

வங்கித் துறையில் பணியாற்றுகின்றவர்களின் "ஐக்கிய வங்கியலாளர்களின் மாநாடு" நேற்று முன் தினம் கொழும்பில் முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இந்த இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரச வங்கி கட்டமைப்புக்குள் பெரும் செல்வந்தர்கள் மற்றும் கோடீஸ்வரர்கள் பினையின்றி பெற்றுக் கொண்ட கடன் நட்பு வட்டாரத்தின் அடிப்படையில் இரத்து செய்யப்பட்டது என்று கேள்விப்படுகின்றோம்.

இதுகுறித்து நாம் பாராளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய போது அது இரகசிய விடயங்கள் அவற்றை வெளியிட முடியாது என்று கூறப்பட்டது.

அரசாங்கம் அப்படி கூறினாலும் ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் ஊடாக இவ்வாறான திருட்டுத்தனமான கொடுக்கல் வாங்கல்களையும் கடன் இரத்து செய்யப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலையும் வெளியிடுவோம்.

அநீதமான முறையில் இவ்வாறான சலுகைகளை பெற்றுக் கொண்டவர்கள் அனைவரும் அந்தக் கடன் தொகையை மீள செலுத்த வேண்டியேற்படும்.

சாதாரண பொது மக்களுக்கு ஒரு சட்டமும், நட்பு வட்டார தொடர்புகள் உள்ள செல்வந்தர்களுக்கு வேறு ஒரு சட்டமும் நடைமுறைப்படுத்தப்படுவதற்கு இடமளிக்க முடியாது-என்றார்.

# பிரிவினைவாதத்தை அடிப்படையாகக் கொண்ட நபர்களே கடந்த காலங்களில் ஆட்சி செய்தனர்!

## அநுர குமார திசாநாயக்க தெரிவிப்பு



கொழும்பு, செப். 16

இனவாதத்தை தூண்டி பிரிவினைவாதத்தை அடிப்படையாகக் கொண்ட நபர்களே கடந்த காலங்களில் நாட்டை ஆட்சி செய்ததாக, தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

பன்னலவில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டின் கடந்த கால ஆட்சியாளர்களைப் பாருங்கள். அவர்கள் இனவாதத்தை தூண்டி, பிரிவினைவாதத்தை அடிப்படையாக் கொண்டே ஆட்சிக்கு வந்தார்கள். வடக்கிலும் கிழக்கிலும் பிரிவினையை ஏற்படுத்தினார்கள்.

முஸ்லிம்களின் உணவகங்களில் சாப்பிட வேண்டாம் என்றார்கள், உயிர்த்த ஞாயிறுதினத்தில் நடத்தப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதலை சாதகமாக்கி பிரசாரம் செய்தார்கள். ஆனால், இப்போது காலம் மாறியிருக்கிறது. அண்மையில் நான் கிழக்குக்கு சென்றேன். அங்கு ரணில் விக்கிரமசிங்க அல்லது சஜித் செல்லும்போது முஸ்லிம் தலைவர் ஒருவரை அழைத்துச் செல்வார்கள்.

ஆனால், நான் கலந்து கொண்ட கூட்டத்தில் முஸ்லிம்கள் திரண்டு வந்து ஆதரவளித்தார்கள். அவ்வாறானெனின் அவர்கள் புதிய அரசியல் கலாசாரத்தை விரும்புகிறார்கள் என அர்த்தமாகும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலுடன் இன்னும் ஐந்து வருடங்களுக்கு இந்நாடு முன்னோக்கிச் செல்ல வேண்டும்

## சாகல ரத்நாயக்க தெரிவிப்பு

**கொழும்பு, செப். 16**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இன்னும் ஐந்து வருடங்களுக்கு இந்த நாடு முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்று தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

கொவிட் காலத்தில் அப்போதைய அரசு வரிச் சுமைகளைக் குறைத்தமையின் காரணமாகவே இலங்கை நெருக்கடிக்குள் சிக்கியது. அதேபோல் இரசாயன உர இறக்குமதிக்குத் தடை விதித்தமையினால் இலங்கையின் விவசாய உற்பத்திகள் முற்றாகச் சரிவைக் கண்டன. அதனால் புதிய வகையிலான விளைச்சல்களை கண்டுபிடிப்பதற்கான முயற்சிகளும் பாதிப்பை எதிர்கொண்டன.

அந்தநிலையிலிருந்து மீளவே நாம் சர்வதேச நாணய நிதியத்துடன் பயணிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அதனாலேயே நாட்டின் அத்தியாவசியப் பொருட்களின் தட்டுப்பாடுகளிலிருந்து மீண்டு வர முடிந்தது. குறிப்பாக சர்வதேச நாடுகள் மத்தியில் இலங்கை மீதான நம்பிக்கை ஏற்பட்டது. அதனால் சுற்றுலாத்துறையும் மூச்சுவிட ஆரம்பித்தது.

அதனால் அப்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மேற்கொள்ளப்பட்ட நிதி முகாமைத்துவம் உள்ளிட்டச் செயற்பாடுகள் தேசிய பொருளாதாரத்தை நிலைப்படுத்தியிருந்தது.

அதன்படி இப்போது துரித அபிவிருத்திக்கான வேலைத் திட்டம் அவசியப்படுகின்றது. இந்த வருடத்தின் இறுதியில் சுற்றுலாப் பயணிகள் வருகையை 25 இலட்சமாக அதிகரிப்பதற்கான வேலைத்திட்டங்களை ஜனாதிபதி தயாரித்திருக்கின்றார்.

அதேபோல் எமது இறக்குமதிகளுக்குச் செலுத்தவே வருமானம் போதுமாக இருப்பதால் ஏற்றுமதி பொருளாதாரத்தை உருவாக்கி அதிக வருமானத்தை ஈட்டும் திட்டங்களையும் அவர் தயார்படுத்தியுள்ளார்.

தற்போதும் இலங்கை பல நாடுகளுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களில் கைசாத்திட்டுள்ளது. மேலும் மீள் புதுப்பிக்கக் கூடிய வலுசக்தி உற்பத்தியை ஆரம்பித்துள்ளோம்.

இவற்றை முன்னோக்கிக் கொண்டு செல்லக்கூடிய ஒரே தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டுமே இருப்பதாலேயே அவரோடு இன்னும் ஐந்து வருடங்களுக்கு இந்த நாடு முன்னோக்கிச் செல்ல வேண்டும் என்று வலியுறுத்துகின்றோம்.- என்றார். (அ)

# ஒற்றையாட்சியை பாதுகாப்பதற்குரிய உத்தரவாதத்தை சஜித் வழங்கவில்லை!

## சாகர காரியவசம் குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 16



"ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதற்குரிய உத்தரவாதத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ வழங்கவில்லை. மாறாக அவர் ஐக்கிய இலங்கை தொடர்பிலேயே பேசி வருகின்றார்.

ஆனால், ஒற்றையாட்சியைப் பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவேன் என மொட்டுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார். அத்துடன், அரசமைப்பில் 13 ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் வழங்கப்படமாட்டாது எனவும் நாமல் ராஜபக்ஷ தெளிவாக கூறியுள்ளார்."

- இவ்வாறு பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:-

உலகில் ஒற்றையாட்சியுடைய நாடுகள் உள்ளன, ஐக்கிய நாடுகள் உள்ளன. ஐக்கிய அரசு இராஜ்ஜியத்தை எடுத்துக் கொண்டால் மூன்று நாடுகள் இணைந்து உருவாக்கப்பட்ட தொன்றாகும்.

எந்நேரத்தில் வேண்டுமானாலும் அந்நாடுகளால் பிரிந்து செல்ல முடியும். ஐக்கிய இராச்சியம் என்பது அப்படிதான். 28 நாடுகள் இணைந்து உருவாக்கப்பட்டது. இதைத்தான் ஐக்கிய நாடு என்பது.

சஜித் பிரேமதாஸ கடந்த காலங்களில் ஐக்கிய இலங்கை தொடர்பிலேயே பேசி வருகின்றார். அவரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில்கூட ஒற்றையாட்சி பற்றி குறிப்பிடப்படவில்லை. 13 இற்கு அப்பால் சென்று அதிகாரம் பகிரப்படும் எனக் கூறப்பட்டுள்ளது.

வடக்கு மக்களுக்கு ஒன்றையும், தெற்கு மக்களுக்கு வேறொன்றையும் கூறி மக்களை ஏமாற்றும் அரசியலை ஐக்கிய மக்கள் சக்தி நடத்தி வருகின்றது.-என்றார். (அ)

# பொருளாதார நெருக்கடிக்கு ரணில் தான் காரண கர்த்தா

## அனுர பகிரங்க குற்றச்சாட்டு



கொழும்பு, செப். 16

நாட்டில் ஏற்பட்ட திடீர் நெருக்கடிக்கு ரணில் விக்ரமசிங்கவே காரண கர்த்தா எனத் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

மீரிகமவில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தாங்கள் ஆட்சியில் இல்லையென்றால் நாடு, பௌத்தம் மற்றும் இராணுவம் போன்றவற்றுக்கு ஆபத்து ஏற்படும் என ராஜபக்ஷக்கள் அன்று அச்சுறுத்தி வந்தனர்.

இன்று தாம் இல்லையென்றால், எரிவாயு, எரிபொருள் மற்றும் டொலருக்கு நெருக்கடி ஏற்படும் என்று தெரிவிப்பதற்கு ரணில் எரிவாயு நிறுவன உரிமையாளரோ, அரேபியச் சுல்தானோ அல்ல.

அத்துடன், தாம் எழுந்து சென்றால் டொலரின் பெறுமதி 400 ரூபாய் வரை உயரும் என்கிறார்.

அவரே நாட்டில் எரிபொருள் இல்லாத ஒரு பொருளாதாரத்தை ஏற்படுத்தினார்.

2015 முதல் 2019 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் ரணில் வாங்கிய 12.5 பில்லியன் டொலர் பெறுமதியான இறையாண்மை பத்திர கடன்களையே, செலுத்த முடியாது என கோட்டாபய அரசாங்கம் அறிவித்தது.

எனவே, நாட்டில் திடீரென டொலர் நெருக்கடி ஏற்பட்டு, பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாவதற்கு ரணில் விக்ரமசிங்கவே பொறுப்பு கூற வேண்டும்-என்றார். (அ)

# தேர்தல் யுத்தத்தில் தோற்றால் நாட்டு மக்களுக்குப் பேரழிவு!

## ராஜித சேனாரத்ன எச்சரிக்கை

கொழும்பு, செப். 16

இலங்கையில் இப்போது சரியான தலைவர்கள் யார் என்பதைத் தீர்மானிக்க மக்களுக்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளதாக முன்னாள் அமைச்சரும் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஒருநாள் ஒரு வீட்டில் தீப் பற்றிக்கொண்டது. வீட்டில் உள்ளவர்கள் அச்சத்தில் இருந்தனர். அவர்களை மீட்க எவரும் வரவில்லை. அப்போது ஒரு தலைவர் வந்து தீயை அணைத்தார். பின்னர் வந்த சிலர் வீட்டுக்கு வர்ணம் பூசினர். பின்னர் தீயை அணைத்தவரை அவர்கள் திருடர் என்று சொன்னார்கள்" - என்று புத்த பெருமான் ஒரு போதனையில் சொல்லியிருக்கிறார்.



அப்படித்தான் இலங்கையின் நிலைமையும் இருந்தது.

ஜனாதிபதி பதவியைத் தட்டில் வைத்து தந்தபோதும்கூட எவரும் நாட்டை ஏற்க முன்வரவில்லை. அப்போது சில காலம் கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்ளுமாறு மக்களிடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கோரினார்.

அரசியல்வாதிகளுக்குப் பொறுமை இருக்கவில்லை. மக்களுக்குப் பொறுமை இருந்தது. எனவே, நாட்டில் இப்போது சரியான தலைவர்கள் யார் என்பதைத் தீர்மானிக்க மக்களுக்கு அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

கிறீஸ் நாட்டில் ஒரே வருடத்தில் நான்கு ஆட்சிகள் வந்தன. அப்போது அரச ஊழியர்களின் சம்பளம் 50 சதவீதமாக வெட்டப்பட்டது.

ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களுக்கான எந்த நிவாரணத்திலும் கைவைக்கவில்லை. நாட்டை நெருக்கடியிலிருந்து மீட்க வழிசெய்தார். அதனால் இந்தப் பாதையை மாற்றினால் பாதகமான விளைவுகளை நாடு எதிர்கொள்ளும்.

அடுத்துவரும் தேர்தலை யுத்தம் போல் நினைக்க வேண்டும். அந்த யுத்தத்தில் தோற்றால் நாட்டு மக்கள் பெரும் அழிவுகளுக்கு முகம்கொடுக்க வேண்டியிருக்கும் என்பதை கருத்தில் கொண்டு சரியான தலைவரை தெரிவு செய்ய வேண்டும்-என்றார். (அ)

# அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு ஏற்பட வழி செய்தவர் ரணில் மாத்திரமே!

## கல்வி அமைச்சர் சுசில் கூறுகிறார்

கொழும்பு, செப். 16

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே அரச ஊழியர்களுக்குச் சம்பள அதிகரிப்பு செய்ய வழி செய்திருக்கின்றார் என்று கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், 2022 ஆம் ஆண்டில் நாட்டில் பல பிரச்சினைகள் காணப்பட்டபோது எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கைகொடுக்காமையினால் மாற்றுக் கட்சி உறுப்பினர்களுடன் வேலை செய்ய வேண்டிய நிலைமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வந்தது. நாட்டின் நிலையைக் கருத்தில் கொண்டு அந்தச் சவாலையும் அவர் ஏற்றுக்கொண்டார்.

எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அரச ஊழியர்களைப் பணிப் புறக்கணிப்புக்களுக்கு மாத்திரம் பயன்படுத்திவிட்டு கைவிட்டு விடுவர். ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரமே அரச ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு செய்ய வழி செய்திருக்கின்றார்.

இன்று பங்களாதேஷில் ...



...டுள்ளது. இருப்பினும் அங்கு வரிசை யுகம் தோன்றியுள்ளது.

இதே கஷ்டங்களை இலங்கையும் அனுபவித்தது. அவ்வாறானதொரு கஷ்டத்தை கடந்தே இன்றைய நிலைக்கு வந்திருக்கின்றோம். மீண்டும் அந்த நிலைக்கு நாம் திரும்ப வேண்டுமா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

இந்தியா, பங்களாதேஷ் போன்ற நாடுகளிடம் பெற்றக் கடனையும் நாம் திருப்பிச் செலுத்தியிருக்கின்றோம்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைதியான தேர்தலுக்கு இளைஞர், யுவதிகள் ஆதரவு

## தேர்தலில் வாக்களிப்பது எவ்வாறு? இளைஞர்களுக்கு கபே அறிவூட்டல்

திருகோணமலை, செப். 16

**அமைதியான தேர்தலுக்கான பிரகடனத்தில் இளைஞர்கள் கையொப்பமிட்டு தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.**

இதேவேளை, ஜனாதிபதித் தேர்தலில் எவ்வாறு வாக்களிப்பது என்பது தொடர்பிலும் இளைஞர் கழக புதிய வாக்காளர்களுக்கு அறிவூட்டப்பட்டது.

இந்த நிகழ்வு திருகோணமலை, கிண்ணியா விசன் மண்டபத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இதில் 50 இற்கும் மேற்பட்ட இளைஞர், யுவதிகள், புது வாக்காளர்கள் கலந்து கொண்டு, வாக்களிப்பு முறை சம்பந்தமான அறிவுரைகளைப் பெற்றுச் சென்றனர்.

இதன்போது, அமைதியான தேர்தலுக்கான பிரகடனத்தில் கலந்து கொண்ட அனைவரும் தங்களது கையொப்பங்களை இட்டனர்.

குறித்த நிகழ்வை திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் முஹம்மத் ராபில் ஏற்பாடு செய்தார். இதில் வளவாளராக நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கத்தின் (கபே) நிறைவேற்றுப் பணிப்பாளர் மனாஸ் மக்கின் கலந்து கொண்டார்.

(எ)

## சம்பியனானது சர்க்கியன் றோயல்ஸ் அணி

அட்டாளைச்சேனை, செப். 16

தேசிய மீலாத் நபி தின விழாவை முன்னிட்டு அட்டாளைச்சேனை கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி மாணவர்களிடையே ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டி அட்டாளைச்சேனை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. இதில் சர்க்கியன் றோயல்ஸ் அணி சம்பியனானது. இரண்டாமிடத்தை ஷர்க்கியன் றொபின்ஸ் அணி பெற்றது.

(எ)





## விசேட தேவையுடையோருக்கு அடையாள அட்டை வழங்கல்

மட்டக்களப்பு, செப். 16

மட்டக்களப்பில் விசேட தேவையுடையோருக்கான அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியுமான திருமதி ஜஸ்டினா முரளீதரன் தலைமையில் நடைபெற்றது.

உதவித் தேர்தல்கள் ஆணையாளர் எம். ஏ. எம். சுபியானின் ஒழுங்கமைப்பில் விசேட தேவையுடையவர்களுக்கான அடையாள அட்டைகள் வழங்கி வைக்கப்பட்டன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் விசேட தேவையுடையவர்கள் தமது வாக்குகளைப் பதிவு செய்து கொள்வதற்காக முதன் முறையாக இந்த அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திருமதி சுதர்ஷினி சிறீகாந், மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் திருமதி எஸ். கோணேஸ்வரன் உட்பட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

(எ)

## திருகோணமலையில் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கி வைப்பு

திருகோணமலை, செப்.16

திருகோணமலையில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கல்விக்கான உதவித் தொகை பெரண்டினா நிறுவனம் ஊடாக வழங்கி வைக்கப்பட்டன. இந்த நிகழ்வு திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

பெரண்டினாவின் கல்வி ஆதரவு திட்டங்களில் ஒன்றாக, ஆண்டுதோறும் குறைந்த வருமானம் கொண்ட பயனாளிகளின் குடும்பங்களைச் சேர்ந்த திறமையான மாணவர்களுக்கு உதவி வழங்கப்பட்டு வருகிறது.

இந்த உதவித் தொகை உயர்தரப் பிரிவு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அத்தியாவசியமான மாதாந்த செலவுகளை ஈடு செய்ய பெரிதும் பங்களிக்கிறது. தற்போது, இந்தத் திட்டத்தின் மூலம் வருடந்தோறும் 550இற்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு 7 மில்லியன் ரூபாய்க்கும் மேலான தொகையை பெரண்டினா நிறுவனம் வழங்கி வருகிறது.

இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக திருகோணமலை கோட்டக் கல்வி பணிப்பாளர் சண்முகநாயகம், சிறப்பு விருந்தினர்களாக திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அதிபர் கணேசலிங்கம், உவர்மலை விவேகானந்தா கல்லூரி அதிபர் புவனேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். அத்துடன் 2024 கல்வி ஆண்டுக்குரிய உயர்தர மாணவர்களுக்கு காசோலைகளும் புத்தகங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

(எ)





## தேர்தல்கள் விஞ்ஞாபனமும் மக்களுக்கு விழிப்புணர்வும்

கிண்ணியா, செப். 16

இலங்கையில் நடைபெறவுள்ள தேர்தல்கள் குறித்து பொதுமக்களிடம் விஞ்ஞாபனத்தைப் பகிர்வதை மையமாகக் கொண்டு திருகோணமலை மாவட்ட சமூகத் தலைவர்களுடன் விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

உள்ளடக்கிய ஆட்சிக்கான குடிமக்களின் குரல் மற்றும் முன் முயற்சி எனும் திட்டத்தின். கீழ் மேற்கொள்ளப்பட்ட, பிரஜைகளின் தேர்தல் விஞ்ஞாபனத்தை பகிர்ந்து கொள்ளல் செயல்முறை கிழக்கு சமூக அபிவிருத்தி மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் புகாரி முகமட் தலைமையில் இந்த கலந்துரையாடல் நடைபெற்றது.



கிழக்கு சமூக அபிவிருத்தி நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கலந்துரையாடல் நேற்றுக் காலை 9 மணியளவில் கிண்ணியா பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில், சமூகச் செயல்பாட்டாளர்கள், சமூக ஆர்வலர்கள், சமயத் தலைவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பெண்கள் அமைப்புகள், இளைஞர், யுவதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(எ)

## வரலாற்று நூல் வெளியீடு

மட்டக்களப்பு, செப். 16

"செட்டிபாளையம் கிராம மக்களின் வாழ்வும் வளமும்" என்ற நூலின் வெளியீட்டு விழா இன்று திங்கட்கிழமை பிற்பகல் 02. 30 மணிக்கு மட்டக்களப்பு, செட்டிபாளையம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஓய்வுநிலை அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் மேலதிக செயலாளர் கலாநிதி சிதம்பரப்பிள்ளை அமலநாதன் தொகுத்த இந்த நூலின் வெளியீட்டு விழா, கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கலாநிதி மூ. கோபாலரெத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளீதரன், கிழக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# இரண்டு தீமைகளில் ஒன்றை தெரிவு செய்யும் நிர்ப்பந்தம்

## ட்ரம்ப், கமலா குறித்து பாப்பரசர் விமர்சனம்

ரோம், செப். 16

**"அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் கமலா ஹாரிஸ் வாழ்க்கைக்கு எதிரானவர்கள்"- இவ்வாறு பாப்பரசர் பிரான்சிஸ் விமர்சித்துள்ளார். அதேவேளை, "இரண்டு தீமைகளில் ஒன்றை தெரிவு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம்" என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.**



தனது 12 நாட்கள் ஆசிய பயணத்தை முடித்துக் கொண்டு விமானத்தில் ரோம் திரும்பிய போது செய்தியாளர்களிடம் பாப்பரசர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். "ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இருவரும் வாழ்க்கைக்கு எதிரானவர்கள். அவர்களில் ஒருவர் புலம்பெயர்ந்தோர்களை நிராகரிப்பவர், மற்றொருவர் குழந்தைகளைக் கொல்பவர்.

நான் ஓர் அமெரிக்கர் இல்லை. நான் அங்கு வாக்களிக்கப் போவதும் இல்லை. ஆனால், ஒன்று தெளிவாக இருக்கட்டும், இருவரும் புலம்பெயர்ந்தவர்களை வெளியேற்றுகிறார்கள். அவர்களுக்கு வேலை வழங்குவதில்லை. அப்படிப்பட்ட இருவரையும் ஆதரிப்பது பாவம். அமெரிக்கர்கள் இப்போது, இரண்டு தீமைகளில் ஒன்றை தெரிவு செய்ய வேண்டும். யார் மிகவும் குறைவான தீமை உடையவர்? அந்த பெண்மணியா? அல்லது அந்த கனவானா? அது எனக்குத் தெரியாது. ஒவ்வொருவரும் தங்களின் மனசாட்சிப்படி சிந்தித்து முடிவெடுக்கட்டும்" என்று பாப்பரசர் கூறினார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், மீண்டும் ஆட்சிக்கு வந்தால் சட்டவிரோதமாக புலம்பெயர்ந்தோரை சுற்றி வளைத்து அவர்களை நாடு கடத்துவேன் என்று உறுதியளித்துள்ளார். கருக்கலைப்பை பெண்களுக்கான தேசிய உரிமையாக்கிய 1973ஆம் ஆண்டு சட்டத்தை திரும்பவும் மீட்டெடுப்பேன் என்று ஜனநாயகக் கட்சி வேட்பாளர் கமலா ஹாரிஸ் உறுதியளித்துள்ளார். இந்த நிலையிலேயே அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் குறித்து போப் பிரான்சிஸ் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார். (எ)

# காஸாவில் பாடசாலை மீது இஸ்ரேல் மீளவும் தாக்குதல்

## 40 பேர் பலி! ஐ. நா. கண்டனம்

காஸா, செப். 16

காஸாவில் உள்ள பாடசாலை மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 40 பலஸ்தீனர்கள் உயிரிழந்ததாகவும், பலர் காயமடைந்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு சர்வதேச அளவில் கண்டனம் எழுந்துள்ளது.

மத்திய காஸாவில் உள்ள ஐ.நா நடத்தும் அல்-ஜவுனி பாடசாலை மீது நடத்தப்பட்ட தாக்குதலில் ஐ. நா. ஊழியர்கள், ஹமாஸ் போராளிகள் எனப் பலர் கொல்லப்பட்டனர். இவர்களின் உடலை இஸ்ரேல் இராணுவம் அடையாளம் கண்டுள்ளது.

நாளுக்கு நாள் இஸ்ரேல், காஸாவில் தாக்குதலை தீவிரப்படுத்திவரும் நிலையில், ஐ. நா. பொதுச் செயலாளர், காஸாவில் உடனடி போர் நிறுத்தத்துக்கான தனது கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தினார். பலஸ்தீன பகுதியில் நடக்கும் பயங்கரமான வன்முறை நிறுத்தப்பட வேண்டும் என்று அவர் கூறினார். (எ)

# சட்டபூர்வ ஓய்வூதிய வயதை அதிகரிப்பதற்கு சீனா முடிவு

பீஜிங், செப். 16

சீனாவில் சட்டபூர்வ ஓய்வூதிய வயதை படிப்படியாக அதிகரிப்பது குறித்த முடிவுக்கு 14ஆவது தேசிய மக்கள் காங்கிரஸின் நிலைக்குழுவின் 11ஆவது அமர்வு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதில் எடுக்கப்பட்ட முடிவின் படி, 2025ஆம் ஆண்டு முதல் 15 ஆண்டுகளில் ஆண்களுக்கான சட்டபூர்வ ஓய்வூதிய வயது 60இல் இருந்து 63 ஆக உயர்த்தப்படும். பெண் பணியாளர்களின் ஓய்வு வயது 55இல் இருந்து 58 ஆகவும், பெண் தொழிலாளர்களின் ஓய்வு வயது 50இல் இருந்து 55 ஆகவும் உயர்த்தப்படும். சீன மக்களின் சராசரி ஆயுள் காலம், சுகாதார நிலைமைகள், மக்கள் தொகை அமைப்பு, கல்வி நிலை ஆகியவற்றின் விரிவான மதிப்பீட்டின் அடிப்படையில் இந்தத் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. (எ)

# கமலாவுடன் விவாதத்தில் இனி பங்கேற்க மாட்டேன்

## டொனால்ட் ட்ரம்ப் உறுதி

நியூயோர்க், செப். 16

ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரான கமலா ஹாரிஸுடனான மற்றொரு நேரடி விவாதத்தில் பங்கேற்க மாட்டேன் என்று குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.



எதிர்வரும் அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், இரண்டு நேரடி விவாதங்களில் பங்கேற்றார். கடந்த ஜூன் மாதம் ஜனாதிபதி ஜோ பைடனுடனும், அண்மையில் கமலா ஹாரிஸுடனும் அவர் நேரடி விவாதத்தில் பங்கேற்றார். ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கப்பட்ட ஜோ பைடன், அதிலிருந்து விலகுவதாக அறிவித்தார். இதையடுத்து கமலா ஹாரிஸ் அந்தக் கட்சியின் வேட்பாளராக அறிவிக்கப்பட்டார்.

இந்த நிலையில், மூன்றாவது விவாதத்துக்கு கமலா ஹாரிஸ் தரப்பில் அழைப்பு விடுக்கப்பட்டது. இருப்பினும் அதில் பங்கேற்க மாட்டேன் என்று ட்ரம்ப் தெரிவித்துள்ளார். "வாக்காளர்களுக்காக மேலும் ஒரு விவாதம் மேற்கொள்ள வேண்டும்" என வியாழக்கிழமை அன்று சார்லோட்டில் நடைபெற்ற தேர்தல் பரப்புரையில் கமலா ஹாரிஸ் தெரிவித்தார். இந்தச் சூழலில் தான் ட்ரம்ப் அதற்கு மறுத்து தெரிவித்துள்ளார்.

"மூன்றாவது விவாதம் என்பது இருக்காது. கடந்த நான்கு ஆண்டு காலத்தில் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் என்ன செய்தார் என்பதில் கவனம் செலுத்த வேண்டி உள்ளது. அனைத்து கருத்துக் கணிப்பு முடிவுகளும் எங்களுக்கு சாதகமாக இருந்தது" என்று ட்ரம்ப் தனது ட்ரூத் சமூக வலைத்தளப் பதிவில் கூறியுள்ளார். (எ)

# முதலமைச்சர் கெஜ்ரிவால் இராஜினாமா!

புதுடில்லி, செப். 16


நான் நேர்மையானவன் என்று மக்கள் தீர்ப்பளிக்கும் வரை முதலமைச்சர் நாற்காலியில் அமரமாட்டேன் என்று டில்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் தெரிவித்துள்ளார்.

டில்லி அரசின் மதுபான கொள்கையை அமுல்படுத்தியதில் நடந்த சட்டவிரோத பணப் பரிமாற்றம் தொடர்பில் கடந்த மார்ச் 21ஆம் திகதி கெஜ்ரிவாலை அமுலாக்கத்துறை கைது செய்தது.

இந்த நிலையில் பிணையில் வெளிவந்துள்ள கெஜ்ரிவால் தனது பிணைக் காலத்தில் தனது அலுவலகத்துக்கோ, தலைமைச் செயலகத்துக்கோ செல்லக்கூடாது என்று நீதிமன்றம் நிபந்தனை விதித்தது. ஆளுநரின் ஒப்புதல் பெற தேவையில்லாத பட்சத்தில், கோப்புகளில் அவர் கையெழுத்திடக்கூடாது என்றும் நிபந்தனை விதித்தது. சாட்சிகளுடன் பேசக்கூடாது என்றும் கூறியது.

இந்த நிலையில் டில்லி முதலமைச்சர் பதவியில் இருந்து இரண்டு நாட்களில் விலகவுள்ளதாக அரவிந்த் கெஜ்ரிவால் அறிவித்துள்ளார். டில்லியில் ஆம் ஆத்மி அலுவலகத்தில் தொண்டர்களிடையே பேசிய கெஜ்ரிவால் மேற்கண்டவாறு கூறினார். (எ)

# இருதரப்பு உறவுகளை மேம்படுத்த இந்தியா - சீனா இடையே இணக்கம்



பீஜிங், செப். 16

சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ மற்றும் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் ஆகியோர் இடையே ரஷ்யாவில் நடந்த சந்திப்பின் போது இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கான சூழ்நிலைகளை உருவாக்க இணைந்து செயல்பட ஒப்புக்கொண்டதாக சீன வெளிவிவகார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சீன வெளிவிவகார அமைச்சு வெளியிட்ட செய்திக்குறிப்பில், "பிரிக்ஸ் கூட்டமைப்பு நாடுகளின் பாதுகாப்பு விவகாரங்களுக்கான உயர்மட்டத் தலைவர்கள் சந்திப்பு ரஷ்யாவின் செயின்ட் பீற்றர்ஸ்பர்க்கில் நடந்தது. இந்த பேச்சுகளின் இடையே, வெளிவிவகார அமைச்சர் வாங் யீ மற்றும் அஜித் டோவல் ஆகியோர் சந்தித்து, இரு நாடுகளின் எல்லைப் பிரச்னைகள் குறித்த சமீபத்திய ஆலோசனையில் ஏற்பட்ட முன்னேற்றம் குறித்து விவாதித்தனர்.

சீன - இந்திய மக்களின் நீண்டகால நலன்கள், பிராந்திய அமைதி மற்றும் வளர்ச்சி ஆகியவற்றுக்கு இரு நாடுகளின் உறவுகளில் ஸ்திரத்தன்மை முக்கியம் என இரு தரப்பு பிரதிநிதிகளும் வலியுறுத்தினர். இரு நாடுகளின் தலைவர்கள் எட்டிய ஒருமித்த கருத்தை செயல்படுத்தவும், பரஸ்பர புரிதல் மற்றும் நம்பிக்கையை மேம்படுத்தவும், தொடர் தொடர்புகளை பேணவும், இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கான சூழ்நிலைகளை உருவாக்கவும் சீனாவும் இந்தியாவும் ஒப்புக்கொண்டன" என தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# போராட்டத்தை தூண்டிவிட்டதாக இம்ரான்கான் மீது வழக்குப்பதிவு

இஸ்லாமாபாத், செப். 16

போராட்டத்தை துண்டிவிட்டதாக பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் மீது மேலும் ஒரு வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் நாட்டின் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் மீது "தோஷ்கானா" வழக்குப்பதிவு செய்யப்பட்டது. பின்னர் அவருடைய ஆட்சி கவிழ்க்கப்பட்டு பாகிஸ்தான் நீதிமன்றம் அவரை சிறையில் அடைத்தது. மேலும் அவர் நிறுவிய பாகிஸ்தான் தெரிக்-இ-இன்சாப் கட்சிக்கு நாடு தழுவிய தடை விதிக்கப்பட்டது.

சிறையில் உள்ள இம்ரான் கானை விடுவிக்க வலியுறுத்தி தலைநகர் இஸ்லாமாபாத் உட்பட நாட்டின் முக்கிய நகரங்கள் முழுவதும் அவருடைய ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். சில நாட்களுக்கு முன்னர் நடந்த இந்த போராட்டம் நாடு முழுவதும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. போராட்டத்தில் ஈடுபட்ட பலர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் தனது சமூக ஊடகப் பதிவுகள் மூலம் அரசாங்க அதிகாரிகளை கலகத்துக்கு தூண்டியதற்காகவும், "தேசத்துரோக செயலில் ஈடுபட்டதற்காகவும் இம்ரான்கான் மீது மேலும் ஒரு வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் பொருளாதாரம் மிக வேகமாக வளர்ச்சி

## இரண்டாம் காலாண்டில் உள்நாட்டு உற்பத்தி 4. 7 சதவீதம் அதிகரிப்பு

கொழும்பு, செப். 16

**இந்த வருடத்தின் ஏப்ரல் - ஜூன் வரையான 3 மாதங்களில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 4.7 சதவீதமாக அதிகரித்திருப்பதன் மூலம், இரண்டாம் காலாண்டில் நாட்டின் பொருளாதாரம் முன்னெதிர்வு கூறப்பட்டதை விடவும் மிக வேகமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது.**

புள்ளிவிவரவியல் திணைக்களத்தின் தரவுகளின்படி ஜனவரி - மார்ச் மாதம் வரையான முதலாம் காலாண்டில் 5. 3 சதவீதமாகப் பதிவான மொத்த உள்நாட்டு உற்பத்தி, இரண்டாம் காலாண்டில் 4. 7 சதவீதமாகப் பதிவாகியிருக்கின்றது. கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் பதிவான மொத்த உள்நாட்டு உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் இது கணிசமானளவு அதிகரிப்பாகும்.

அதேபோன்று இந்தக் காலப்பகுதியில் விவசாயம், கைத்தொழில் மற்றும் சேவைத்துறைகள் முறையே 1. 7 சதவீதம், 10. 9 சதவீதம் மற்றும் 2.5 சதவீதமாக உயர்வடைந்திருக்கின்றன.

எதிர்வரும் 21 ஆம் திகதி ஒன்பதாவது ஜனாதிபதித்தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி 302 ரூபாயாகப் பதிவாகியுள்ளது. (எ)

# மோசடியான வாக்குகளை செலுத்தினால் அபராதம்!

கொழும்பு, செப். 16

ஜனாதிபதித் தேர்தலின்போது மோசடியான வாக்குகளை அல்லது அதற்கு ஆதரவளிப்பவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுமென தேர்தல்கள் ஆணைக்குழுவின் மேலதிக ஆணையாளர் சிந்தக குலரத்ன தெரிவித்தார்.

தேர்தல் முறைகேடு தொடர்பில் உயர் நீதிமன்றத்தால் குற்றம் நிரூபிக்கப்பட்ட ஒரு நபருக்கு 12 மாதங்களுக்கும் மேலான சிறைத்தண்டனை அல்லது 2 இலட்சம் ரூபாய் அபராதம் விதிக்கப்படும்.

இந்தக் குற்றச்சாட்டில் குற்றம் நிரூபிக்கப்பட்ட ஒருவர் 7 ஆண்டுகளுக்கு வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்படாமல் இருக்கவும், தேர்தலில் வாக்களிக்கத் தகுதியற்றவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி சட்டத்தில் 2023 இல் கொண்டுவரப்பட்ட திருத்தத்தின் அடிப்படையில் அபராதம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

# மதுபானசாலைகள் 21,22 இல் பூட்டு

கொழும்பு, செப். 16

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படும் என்று கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 21ஆம், 22 ஆம் திகதிகளில் அனைத்து மதுபானசாலைகளும் மூடப்படும் என கலால் ஆணையாளர் எம். ஜே. குணசிறி குறிப்பிட்டார். (அ)

# பால்மா கொள்வனவுக்காக ரூ. 200 மில்லியன் ஒதுக்கீடு

கொழும்பு, செப். 16

அரசாங்கத்துக்கு சொந்தமான மில்கோ நிறுவனத்தின் நாளாந்த உற்பத்தி அதிகரித்துள்ளதையடுத்து, தற்போது உற்பத்தி செய்யப்பட்டுள்ள 2 இலட்சம் மெற்றிக் தொன் பால் மாவை கொள்வனவு செய்வதற்கு, 200 மில்லியன் ரூபாயை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகரித்துள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் என்ற ரீதியில் தானும் இணைந்து முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை இணங்கியுள்ளதாகவும் விவசாயம் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.



ச. தொ. ச. ஊடாக ஹைலண்ட் பால்மாவை விற்பனை செய்யும் நோக்கில் அரசாங்கம் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

மில்கோ நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்படும் ஹைலண்ட் பால் மாவின் விலையும் கடந்த வாரம் முதல் 400 கிராம் பைக்கெற் ஒன்றின் விலை 75 ரூபாயாலும், 01 கிலோ பைக்கெற் ஒன்றின் விலை 190 ரூபாயாலும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# சிறுவர்களைப் பயன்படுத்தி அரசியல் கட்சிகள் பிரசாரம்

## சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை விசனம்

கொழும்பு, செப். 16

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அரசியல் பிரசாரங்களில் பல்வேறு அரசியல் கட்சிகளும் சிறுவர்களை பயன்படுத்துவது குறித்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

அது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் ஏற்கனவே விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் அந்த அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் பெரியவர்களின் உதவி, தலையீடு அல்லது வற்புறுத்தலுடன் இந்தத் தேர்தல் பிரசாரங்களில் ஈடுபடுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

தேர்தல் பிரசார நடவடிக்கைகளில் சிறுவர்கள் பங்கேற்பதால் விபத்துகள் அல்லது உடல் மற்றும் மன உளைச்சல்களுக்கு உள்ளாக நேரிடும் என அதிகார சபை எச்சரித்துள்ளது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு தமது அதிகார சபைக்குள்ளதெனவும் இதனால் அந்த பொறுப்புகளை தாமதமின்றி நிறைவேற்ற நடவடிக்கை எடுப்பதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

இலங்கை அரசாங்கம், ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைகள் சாசனத்தில் கையொப்பமிட்டு அதில் அங்கம் வகிப்பதுடன் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் சிறார்களின் பாதுகாப்பை உறுதி செய்ய கடமைப்பட்டுள்ளதாக அந்த சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அறிவுறுத்தியுள்ளது.

எனவே, சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் நலன்களை அனைவரின் பொறுப்பாகக் கருதி தேர்தல் பிரசாரங்களில் சிறுவர்கள் பங்கேற்பதைத் தடுக்குமாறு பெற்றோர், பாதுகாவலர்கள் மற்றும் அனைத்து அரசியல் கட்சிகளையும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை வலியுறுத்தியுள்ளது. (அ)

ஜெய்க்கா நிதி சர்ச்சை

# சட்டத்தரணிகள் சங்க தலைவர் இராஜினாமா!

கொழும்பு, செப். 16

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் பதவியில் இருந்து ஜனாதிபதி சட்டத்தரணி கௌசல்ய நவரத்ன இராஜினாமா செய்துள்ளார்.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஐந்து பேர் கொண்ட குழுவின் அறிக்கையைத் தொடர்ந்து, அதன் தலைவர் கௌசல்யா நவரத்னவை பதவி விலகுமாறு ஏகமனதாக அழைப்பு விடுக்கப்பட்டது.

ஜெய்க்கா நிதி சர்ச்சையை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழு நவரத்ன, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் ஜெய்க்கா இடையேயான ஒப்பந்தத்தை கையாள்வதில் வெளிப்படைத்தன்மையுடன் செயல்படத் தவறியமை தலைவராக அவர் மீது வைத்திருந்த நம்பிக்கையை மீறுவதாகக் கண்டறிந்ததை அடுத்து இந்த இராஜிமானா இடம்பெற்றுள்ளது. (அ)

# வாகன இறக்குமதிக்கு வரி விலக்கு இல்லை

## அமைச்சர் பந்துல உறுதி

கொழும்பு, செப். 16

அடுத்த வருடம் முதல் வாகனங்கள் இறக்குமதி செய்யப்படும். ஆனால், வரியின்றி எந்தவொரு நபருக்கும் வாகனங்களை இறக்குமதி செய்ய முடியாது என்று அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி முதல் பல கட்டங்களின் கீழ் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இதன்படி, பொதுப் போக்குவரத்து சேவைகளுக்காக பயன்படுத்தப்படும் வாகனங்கள் முதலில் இறக்குமதி செய்யப்படும்.

வர்த்தக மற்றும் சரக்கு வாகனங்கள் இந்த வருடம் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி முதல் இறக்குமதி செய்யப்படும்.

அனைத்து வகையான வாகனங்களும் 2025 ஆம் ஆண்டின் இரண்டாவது மாதத்தின் முதலாம் திகதியிலிருந்து இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும். அதன்படி, அன்று முதல் முதல் கார்கள், வான்கள், விளையாட்டு பயன்பாட்டு வாகனங்கள், பிக்கப்கள் போன்றவற்றை இறக்குமதி செய்ய அனுமதிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கேள்வி - உரிமம் மீண்டும் செயல்படுத்தப்படுமா?

பதில் - இறக்குமதி தடை நீக்கப்பட்ட பின்னர், உரிமம் பெற்றவர்கள் தங்கள் உரிமத்தின்படி வாகனங்களை இறக்குமதி செய்யலாம்.

கேள்வி - வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான தடை நீக்கப்பட்டவுடன், எதிர்காலத்தில் எந்தவொரு உரிமமும் வழங்கப்பட மாட்டாது என இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துக்கு உறுதியளித்துள்ளது. இந்த வாக்குறுதி தொடர்ந்து நிறைவேற்றப்படுமா? அல்லது ஐ. எம். எவ். உடன் பேச்சுகள் நடத்துகிறீர்களா?



பதில்- ஒப்பந்தத்தின்படி அந்த நிபந்தனைகள் ஒரு துளி கூட மாறாமல் நிறைவேற்றப்படும். இதில் நல்ல ஒரு விடயம் என்னவென்றால் இலவச உரிமத்தின் கீழ் அமைச்சர்கள், எம்.பிக்கள் அல்லது யாருக்கும் வாகனங்களை இறக்குமதி செய்ய முடியாது. சில வரி சதவிகிதம் சேர்க்கப்பட வேண்டும் என்ற ஒப்பந்தம்.. அந்த உடன்படிக்கைக்கு இலங்கை அரசாங்கம் உடன்படுகிறது- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லிபுர...

நடைபெறவுள்ளது. காலை 8 மணிக்கு வசந்த மண்டப பூசை நடைபெற்று தொடர்ந்து சுவாமி தேரில் எழுந்தருள் வார்.

இதேவேளை, பிரசித்தமான சமுத்திர தீர்த்தத் திருவிழா நாளை செவ்வாய்க் கிழமை பி.ப. 5 மணிக்கு கற்கோவளம் பகுதியில் வங்கக் கடலில் நடைபெறும். வசந்த மண்டபப் பூ சை பிற்பகல் 4 மணிக்கு நடைபெற்று தீர்த்தமாடுவதற் காக சுவாமி மாலை 5 மணிக்கு ஆலயத் திலிருந்து புறப்படுவார்.

நாளை மறுநாள், புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலய வளாகத் திலுள்ள கேணியில் பட்டுத் தீர்த்தம் நடைபெறும். அன்று மாலை 5 மணிக்கு கொடியிறக்கம் நடைபெற்று பெருந் திருவிழா நிறைவடையும். (ஐ-02)

## தியாகி...

அமைந்துள்ள அவரது நினைவிடத் தில் அனுஷ்டிக்கப்பட்டது.

தீலிபன் உண்ணாவிரதத்தை ஆரம் பித்த நேரமான காலை 9.45 மணிக்கு நினைவேந்தல் ஆரம்பித்ததுடன், மாவீரர் ஒருவரின் தாயாரால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, திலீபனின் உருவப்படத்திற்கு முன்னாள் மலர் மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

எதிர்வரும் 26 ஆம் திகதி இறுதி நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற வுள்ளன.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் புதிதாக திட்டமிடப்படும் சிங்களக் குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டும், சிறைகளிலும், முகாம் களிலும் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகள் விடுதலை செய் யப்பட வேண்டும், அவசரகாலச் சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும், ஊர்காவல் படையினருக்கு வழங்கப் பட்ட ஆயுதங்கள் முற்றாகக் களையப் பட வேண்டும், தமிழர் பிரதேசங்களில் புதிதாக பொலிஸ் நிலையங்களைத் திறப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் முற்றாக நிறுத்தப் படவேண்டும் என ஐந்து அம்ச கோரிக் கைகளை முன்வைத்து, திலீபன் 1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 15 தொடக்கம் 26 வரையான 12 நாட்கள் அகிம்சை வழியில் யாழ் நல்லூரில் நீராகாரம் அருந்தாமல் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தி சாவைத் தழுவியிருந்தார். (அ)

## மாகாண சபை...

இளையோருக்கான தொழில் வாய்ப்புகளை உற்பத்தித் துறையினூ டாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

நான் வீடமைப்பு அமைச்சராக இருந்தபோது யாழ்ப்பாணத்துக்கு அதிக எண்ணிக்கையிலான வீடமைப்புத் திட்டங்களை பெற்றுக்கொடுத்தேன். மாதிரி கிராமங்களையும் அமைத்தேன். ஆனால் கோட்டாபய ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் ஆட்சிக்கா லத்தில் அவை இடைநிறுத்தப்பட்டன.

நான் ஆட்சியை பொறுப்பேற்றவுடன் அவை அனைத்தும் மீள ஆரம்பிக் கப்படும்.

வடக்கிலும் கிழக்கிலும் யுத்தத்தி னால் இடம்பெயர்ந்த மக்களுக்கு நாம் தீர்வை பெற்றுக் கொடுப்போம்.

விசேடமாக நல்லிணக்கத்தில் காணப்படும் பிரச்னையை முடிவுக்குக் கொண்டு வரவேண்டியுள்ளது.

யாழ்ப்பாணத்திலே அமைக்கப்பட்ட ஜனாதிபதி மாளிகையை சர்வதேச கல்வித் திறனுடன் கூடிய தொழில்நுட்ப நிலையமாக மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன்-என்றார். (அ)

## இலங்கை...

உலகளாவிய மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான ஐ. நா மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க்கின் உரை மற்றும் மியன்மார் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பான எழுத்துமூல அறிக்கை, அதன் மீதான விவாதம் என்பவற்றைத் தொடர்ந்து இலங்கை விவகாரம் குறித்து ஆராயப் பட்டது.

அதன்படி இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் பேரவையில் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட "இலங்கையில் நல்லி ணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துதல்" என்ற தலைப்பிலான 51/1 தீர்மானத்தின் உள்ள டக்க அமுலாக்கத்தில் அடையப்பட்ட முன்னேற்றம் மற்றும் நாட்டின் தற்போ தைய மனித உரிமைகள் நிலவரம் என்பன தொடர்பில் ஐ.நா மனித உரிமைகள் ஆணை யாளர் வோல்கர் டர்க் உரையாற்றினார்.

அதனைத்தொடர்ந்து ஆணையா ளரின் அறிக்கை தொடர்பில் உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் உரையாற்றி யதுடன், உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் இயங்கிவரும் மனித உரிமை கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் அவற்றின் அறிக்கைகளைச் சமர்ப்பித் தன. அவ்வறிக்கைகளில் இலங்கை தொடர்பாக ஏற்கனவே நிறைவேற்றப் பட்ட 51/1 தீர்மானத்தின் ஊடாக ஐ.நா மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் அலுவலகத்துக்கு வழங்கப்பட்டுள்ள ஆணையை மேலும் இருவருடங்களுக்கு நீடிக்கக்கூடியவகையில் அத்தீர்மா னத்தைப் புதுப்பிக்குமாறு பேரவை யிடம் வலியுறுத்தப்பட்டிருந்தது.

இலங்கை தொடர்பில் நிறைவேற்றப் பட்ட 46/1 தீர்மானம், பின்னர் 51/1 ஆக காலநீடிப்புச் செய்யப்பட்டு நடை முறைப்படுத்தப்பட்டு வந்த நிலையில், அத்தீர்மானம் இம்மாதத்துடன் முடிவுக்கு வருகிறது. அதனையடுத்து புதிய தீர்மானமொன்றைக் கொண்டு வருவது பற்றி முன்னர் ஆராயப்பட்ட போதிலும், இலங்கையில் இது தேர்தல் ஆண்டு என்பதால் ஏற்கனவே நிறைவேற் றப்பட்ட தீர்மானத்தை மேலும் ஒன்று அல்லது இரண்டு வருடங்களுக்குக் காலநீடிப்புச் செய்வதற்கான சாத்தியப் பாடு குறித்து பிரிட்டன் தலைமையி லான இணையனுசரணை நாடுகள் ஆராய்ந்து வருகின்றன. (அ)

## தமிழ் அரசு...

சிரேஷ்ட துணைத்தலைவர் சீ. வீ. கே. சிவஞானம் மற்றும் நிர்வாகச் செயலாளர் சேவியர் குலநாயகம் ஆகியோர் கூட்டிணைந்து தயாரித்துள்ளனர்.

இது குறித்து மாவை சேனாதிராசா தெரிவிக்கையில்-

இலங்கைத் தமிழரசுக்கட்சி தற்போது ஜனாதிபதி வேட்பாளர்களில் ஒருவரான சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாக அறிக்கப்பட்டுள்ளது. எனினும் கட்சிக் குள் பல்வேறுபட்ட நிலைப்பாடுகள் காணப்படுவதால் நாம் எமது மக்களை தெளிவுபடுத்த வேண்டியுள்ளது. அதற் காகவே விசேட அறிக்கையொன்றை வெளியிடவுள்ளோம்-என்றார்.

முன்னதாக, கடந்த செவ்வாய்க் கிழமை வவுனியாவில் கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் கள் விஞ்ஞாபனங்களை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட அறுவர் கொண்ட குழு கூடியிருந்தது.

இதன்போது, மத்தியகுழுக் கூட்டத்தை ஒத்திவைத்ததோடு தென்னிலங்கை ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தை ஆராய்ந்து அறிக்கை அளிக்குமாறு மாவை சேனாதிராசா மற்றும் சி.வி.கே. சிவஞானம் ஆகியோ ரிடம் பொறுப்பளிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த இருவரும் யாழ்ப்பாணத்தில் உள்ள கட்சியின் அலுவலகத்தில் கூடி உள்ளடக்கப்பட்ட விடயங்கள் சம்பந்தமாக நீண்ட நேர ஆய்வுகள் நடத்தப்பட்டதன் பின்னர் இறுதி அறிக்கையொன்று தயாரிக் கப்பட்டுள்ளது. (அ)

# சுகு சிறீதரன் அநுரவுக்கு ஆதரவு!

யாழ்ப்பாணம், செப். 16

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் தோழர் அநுர சமூகம் நேர்மை, அர்ப்ப ணம் தன்னலமறுப்பு கொண்ட இளம் தலைவர். இன்றைய நவீன இளம்தலை முறையின் அபிமானம் பெற்ற தலைவர். அவரின் சின்னம் திசைகாட்டிக்கு வாக்களிப்பது இலங்கையின் விடிவுக்கு இன சமூகங்களின் விடிவுக்கான முதல் அடிவைப்பாக அமையலாம் என சமூக செயல்பாட்டாளர் சமூக ஜனநாயகவாதி சுகு சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

இலங்கையில் வறுமை வேலையின்மை எங்கும் ஊழல் எதிலும் ஊழல் தொடர் பான தெளிவான பார்வை அவர்களிடம் உண்டு.

சாதாரண மக்களின் கல்வி, சுகாதா ரம், உணவு, வீடு, நிலம் தொடர்பான கரிசனைகள் அவர்களுக்கு இருக்கின்றன.

சமூகங்களுடைய சமத்துவம் இலங்கையின் வாழ்வு ஒரு சில பணம் படைத்தவர்களுக்கு என்றும் பெருவாரி யான மக்களின் வாழ்வு பாழ்பட்டு வறுமை மிஞ்சி போனது என்ற நிலை யையும் மாற்ற வேண்டுமென்ற தார்மீக ஆவேசம் அவர்களிடம் இருக்கிறது.

மதவாதம், இனவாதம், தீண்டாமை இவற்றுக்கு எதிரான மானசிகமான எண்ணம் அவர்களிடம் இருக்கிறது.

தேசிய இனப் பிரச்னைகளுக்கு- தேசிய இனங்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதில் நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் செயல்படக்கூடிய இலங்கையின் அனைத்து சமூக அறிவு ஜீவிகள் அவர்களுடன் இருக்கிறார்கள். 13 ஆவது மாகாண சபைகளுக்கு உரிய அதிகாரங்களை முழுமையாக பகிர்வதற்கான அக்கறை உள்ளவர்கள் இருக்கிறார்கள் .

குடிப்பரம்பலை மாற்றியமைக்கும் குடியேற்ற திட்டங்களை அனுமதிக்கப் போவதில்லை என்று அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது .

சிவில் நிர்வாக இயந்திரத்திற்கு முன்னுரிமை அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உறுதிப்படுத்தப்பட் டுள்ளது.

முதிர்ச்சியான ராஜதந்திர உறவுகள் பற்றி அவர்களின் தேர்தல் விஞ்ஞாபனம் குறித்துரைக்கிறது.

76 வருடங்களாக மாறி மாறி ஆட்சி செய்தவர்களில் சந்திரிகா அவர்களின் ஆட்சி போன்று விதிவிலக்கான காலங்கள் தவிர இந்த நாடு முழுதாக குட்டிச்சுவர் ஆக்கப்பட்டுள்ளது- தரைமட்டமாக்கப்பட்டுள்ளது. இந்த 76 வருடங்களில் 40 தொடக்கம் 50 வருடங்கள் பேரழிவுகரமானவையாக இருந்தன. இந்த அழிவுகரமான இந்த நாட்டின் தலைவிதியை மாற்ற வேண்டும்.

அரச பயங்கரவாதத்தையும் சமூக வலியையும் அவர்கள் நன்கு புரிந்து கொண்டவர்கள். 45வருட கால அபகீர்த்தியானபயங்கரவாத தடை சட்டத்தை நீக்குவது விசேட அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்குவது பற்றியும் அவர்கள் கூறியிருக் கிறார்கள்.

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் தோழர் அனுர சமூகம், நேர்மை, அர்ப்பணம், தன்னல மறுப்பு கொண்ட இளம் தலைவர்.

இன்றைய நவீன இளம் தலை முறையின் அபிமானம் பெற்ற தலைவர்.

அவரின் சின்னம் திசைகாட்டிக்கு வாக்களிப்பது இலங்கையின் விடிவுக்கு இன சமூகங்களின் விடிவுக்கான முதல் அடிவைப்பாக அமையலாம்.

இந்த நாட்டில் இனமத நல்லுறவு -ஜனநாயக சமூக பொருளாதார கட்டுமானத்தை உருவாக்குவதற்கான உறுதியான அத்திவாரமாக அமையும். தோழர் அனுராவுக்கு அவரின் தேசிய மக்கள் சக்தி திசைகாட்டிக்கு வாக்களிப்போம்-என்றுள்ளது. (அ)

## அரியநேத்திர...

ஏதேனும் அச்சுறுத்தல் ஏற்படக் கூடும் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது.

இதனால் எதிர்காலத்தில் கலந்து கொள்ளும் பொதுமக்கள் சந்திப்பு மற்றும் நிகழ்வுகளின் பாதுகாப்பு தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்ப டும்போது அந்த விடயங்கள் குறித்து அவதானம் செலுத்துமாறு வலியுறுத் தப்பட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக போட்டியிடுவதால் இலங்கை தமிழரசு கட்சியின் பாரா ளுமன்ற உறுப்பினர்களான சாணக்கியன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் அதிருப் தியில் இருப்பதாகவும் அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஆகவே பொது விடயங்களின் கீழ் அச்சுறுத்தல் இருப்பதாகவும், அது தொடர்பில் அவதானமாகச் செயற் படுமாறும் அந்த கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சிங்கள மொழியில் அமைந்த கடிதத்தையும் அதன் தமிழ் மொழி பெயர்ப்பையும் விக்னேஸ்வரன் எம்.பி. நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்தார். (அ)

## அடுத்த ஜனாதி...

பதிவிட்டுள்ளார்.

அந்தப் பதிவில்,

"தேர்தல் மூலம் அவர்களின் எதிர் காலத்தை வடிவமைப்பதில் பொறுப்புக் கூறல், மனித உரிமைகள், நீதி மற்றும் ஒவ்வொரு தனிநபருக்குமான கருத்து சுதந்திரத்தை உறுதி செய்தல் போன்ற, எந்தவொரு வலுவான மற்றும் நிலை யான ஜனநாயகத்தின் கொள்கைகளை இந்த நாள் கொண்டாடுகிறது.

இலங்கையின் ஜனநாயகத்திற்கு சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை உறுதிப்படுத்துவது மிக முக்கியமான நடவடிக்கை" என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## நாட்டில்...

அவசர நிலை ஏற்படக்கூடும் என பாதுகாப்பு சபைக் கூட்டத்தின்போது பாதுகாப்பு பிரதானிகள் ஜனாதிபதி யிடம் சுட்டிக்காட்டியதை அடுத்து இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, எந்தவொரு அவசர நிலையிலும் பொலிஸாருக்கு உதவியாக இராணுவத்தை நிலைநிறுத்துவது குறித்தும், அவசரநிலையில் இராணுவம் தனது அதிகாரங்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது குறித்தும் சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் தேர்தல் ஆணையாளர் நாயகத்துடனும் கலந்துரையாடல் நடத்தப்பட்டுள்ளது.

முப்படைத் தளபதிகள் மற்றும் பொலிஸ் மா அதிபர்கள் தலைமையில் பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவின் தலைமையில் அவசரகால பாதுகாப்பு திட்டம் தயாரிக்கப்பட உள்ளதாக கூறப்படுகிறது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமல் குணரத்ன, பொது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் வியானி குணதிலக்க, பாதுகாப்பு படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, படைத் தளபதிகளின் தலைமையில் எதிர்வரும் 18ஆம் திகதி விசேட கலந்து ரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

அதன் பின்னர் எடுக்கப்படும் தீர்மானங்களை நடைமுறைப்படுத் துவதற்காக ஜனாதிபதியின் தலைமை யில் தேர்தலுக்கு முன்னர் அவசர பாது காப்புச் சபைக் கூட்டமும் நடத்தப்பட உள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சுயாதீன தேர்தலுக்கான வலையமைப்பின் 10 பேர் ஜனாதிபதி தேர்தல் கண்காணிப்பில்

## சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ள இலங்கை

கொழும்பு, செப். 16

**சுயாதீன தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பு 10 பேரடங்கிய அதன் தேர்தல் கண்காணிப்புக் குழுவை இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தியுள்ளது.**

மிக முக்கிய தருணத்தில் நடைபெறும் இம்முறை ஜனாதிபதித் தேர்தல் இலங்கையின் அரசியல் மற்றும் பொருளாதார எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்காற்றும் எனவும் அந்த அமைப்பு எதிர்வுகூறியுள்ளது.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித்தேர்தல் எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், தேர்தல் கண்காணிப்புப் பணிகளை முன்னெடுப்பதற்காக ஐரோப்பிய ஒன்றியம், பொது நலவாய அமைப்பு மற்றும் ஏனைய சர்வதேச நாடுகளின் தேர்தல் கண்காணிப்பாளர்களுக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவால் உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுக்கப்பட்டது. இதற்கமைய ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவின் இரண்டு குழுக்கள் ஏற்கனவே நாட்டை வந்தடைந்ததுடன், அவை நாடளாவிய ரீதியில் தேர்தல் கண்காணிப்புப் பணிகளை ஆரம்பித்துள்ளன. அதேபோன்று சிஷெல்ஸ் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி டெனி போர் தலைமையிலான 13 பேரடங்கிய பொது நலவாய அமைப்பின் தேர்தல் கண்காணிப்புக்குழு நாட்டை வந்தடைந்துள்ளது. அதுமாத்திரமன்றி பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய அமைப்பின் (சார்க்) அங்கத்துவ நாடுகளையும், ரஷ்யாவையும் சேர்ந்த தேர்தல் கண்காணிப்பாளர்கள் எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் அவர்களது தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்கவுள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் சுயாதீன தேர்தல்களுக்கான ஆசிய வலையமைப்பு அதன் தேர்தல் கண்காணிப்பாளர்களைக் கடந்த 11 ஆம் திகதி முதல் இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்புப்பணிகளில் ஈடுபடுத்தியுள்ளது. இந்தக் கண்காணிப்பாளர்களில் தேர்தல் செயன்முறை ஆய்வாளர்கள் உட்பட 10 பேர் உள்ளடங்குகின்றனர்.

அவர்கள் நாடளாவிய ரீதியில் 7 மாகாணங்களில் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதுடன், 14 பிரதான நகரங்களையும், அவற்றைச் சூழவுள்ள ஏனைய பிரதேசங்களையும் இலக்காகக்கொண்டு கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளனர். இதன்போது தேர்தல் செயன்முறையுடன் தொடர்புடைய பல்வேறு தரப்பினருடன் கலந்துரையாடல்களை முன்னெடுக்கவுள்ள அவர்கள், தேர்தல் பிரசார நடவடிக்கைகள், வாக்களிப்பு மற்றும் வாக்கு எண்ணும் செயன்முறை, தேர்தலுக்குப் பின்னரான நிலவரம் என்பவற்றைப் பரந்துபட்ட அளவில் கண்காணிக்கவுள்ளனர். (எ)

# வாகன இறக்குமதியை நிறுத்தி மக்களுக்கு உணவளியுங்கள்

## இராதாகிருஷ்ணன் எம். பி. கூறுகிறார்

ஹற்றன், செப். 16

மலையக மக்களுக்கு வாகன இறக்குமதி தேவையில்லை. வாகனங்களை இறக்குமதி செய்வதை நிறுத்தி விட்டு பசி பட்டினியில் வாடும் மக்களுக்கு முதலில் உணவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

மலையக மக்கள் முன்னணி ஏற்பாட்டில் ஹற்றனில் நடந்த இளைஞர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# குற்றவியல் சட்டத்தை திருத்துவதற்கு அனுமதி

கொழும்பு, செப். 16

குற்றவியல் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

எந்தவொரு முறையிலும் உடல் ரீதியிலான தண்டனையை தடை செய்யும் வகையில், தண்டனைச் சட்டம் திருத்தப்பட்டு, அதற்கு உரிய சட்டத்தை உருவாக்குவதற்காக அமைச்சரவைக் கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி, சட்ட வரைவு தயாரிப்பாளரால் தயாரிக்கப்பட்ட சட்டமூலத்துக்கு சட்டமா அதிபரின் அனுமதியும் கிடைத்துள்ளது.

சட்டமூலத்தை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் பின்னர் அதனை பாராளுமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்ப்பிப்பதற்கும் நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரால் பரிந்துரைக்கப்பட்ட பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ)

# 4 கிலோ அம்பருடன் இருவர் கைது

அம்பாந்தோட்டை, செப். 16

அம்பாந்தோட்டை பகுதியில் பல கோடி ரூபாய் பெறுமதியான 4 கிலோ 10 கிராம் நிறையுடைய அம்பர் (திமிங்கலத்தின் வாந்தி) உடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சந்தேக நபர்கள் இருவரும் மாத்தறை கந்தர மற்றும் நகுலுகமுவ கலகம பிரதேசத்தை சேர்ந்த 45, 34 வயதுடையவர்கள் என பொலிஸார் கூறினர்.

இவர்களில் ஒருவர் மீனவர் எனவும் மற்றையவர் புகைப்பட கலைஞர் எனவும் தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட இருவரும் அம்பாந்தோட்டை நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (எ)

# அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு சீருடை

கொழும்பு, செப். 16

பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ மற்றும் கத்தோலிக்க அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் மேற்கொள்ளும் சேவையைப் பாராட்டி, அவர்களை ஊக்குவிப்பதற்காகத் தற்போது 5,000 ரூபாய் வருடாந்த ஆசிரியர் கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

குறித்த கொடுப்பனவுக்கு மேலதிகமாக 2022 ஆம் ஆண்டுவரை அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்குச் சீருடை வழங்கப்பட்டுள்ளதுடன், தற்போது சீருடை வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்படவில்லை.

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்குச் சீருடை வழங்குதல் தொடர்பாகப் பௌத்த சாசன, மத மற்றும் கலாசார அமைச்சர் சமர்ப்பித்த முன்மொழிவைக் கருத்தில் கொண்டு, 2025 ஆம் ஆண்டில் அனைத்து மதங்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு 5,000 ரூபாய் ஊக்குவிப்புக் கொடுப்பனவு மற்றும் 2,500ரூபாய் சீருடைக் கொடுப்பனவு என்ற வகையில் வருடாந்தம் 7,500ரூபாயை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# நாம் முன்வைத்த திட்டங்கள்தான் வரித் திருத்தங்களுக்கு காரணம்

## ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, செப். 16

சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டதை விட அரசாங்கம் வருமான வரி மூலம் அதிக வருமானத்தைப் பெற்றுள்ளது. எனவே, வரி செலுத்துவோருக்கு அதன் பயன் சென்றடைய வேண்டும் என நாம் முன்வைத்த வேலைத்திட்டத்துக்கமையவே தற்போது அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். மரிக்கார் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி அலுவலகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தல் அண்மித்து வரும் நிலையில் பல பகுதிகளிலும் வன்முறைகள் இடம்பெற்று வருகின்றன. வன்முறைகள் இடம்பெறாது என்று அநுரகுமார திஸநாயக்க கூறினாலும், அவர்களது வழமையான செயல்பாடுகள் இடம்பெறாமல் இல்லை. தோல்வியை அறிந்து கொண்டு வன்முறைகளில் ஈடுபடுவது ஒழுக்கமான செயல் அல்ல.

வருமான வரி தொடர்பில் நாம் கடந்த வாரம் தெரிவித்திருந்தோம். வருமான வரி மூலம் அரசாங்கம் 100 மில்லியன் ரூபாய் வருமானத்தை எதிர்பார்த்தது. ஆனால், 144 மில்லியன் வருமானம் கிடைத்தது. இந்த ஆண்டு 200 மில்லியன் ரூபாய் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இதன் பலன் வரி செலுத்துபவர்களை சென்றடைய வேண்டும் என்பதை நாம் வலியுறுத்தியிருந்தோம்.

அதேபோன்று, வாகன இறக்குமதிக்கும் இடமளிக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தோம். நாம் கூறிய விடயங்களுக்கு சமமான வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்போது வரியைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றார்.

நாம் தெளிவான வேலைத்திட்டங்களை முன்வைத்திருக்கின்றோம். அவற்றை நாம் நிச்சயம் நடைமுறைப்படுத்துவோம்- என்றார். (எ)

# ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு!

கொழும்பு, செப். 16

இந்த வருடத்தின் முதல் ஏழு மாதங்களில் ஏற்றுமதி வருமானம் 5.6 சதவீதமும், இறக்குமதி செலவு 9.1 சதவீதமும் அதிகரித்துள்ளது.

குறித்த காலப்பகுதியில் எரிபொருளுக்காக அதிகளவில் இறக்குமதி செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது. அதன்படி, குறித்த 7 மாதங்களில் எரிபொருள் இறக்குமதிக்காக 2 ஆயிரத்து 548 மில்லியன் டொலர்கள் செலவிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# வெட்கமின்றி கருத்து வெளியிடுவதை ஐக்கிய மக்கள் சக்தி நிறுத்த வேண்டும்

## இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சாடல்

கொழும்பு, செப். 16

வெட்கமின்றி கருத்துக்களை வெளியிடுவதை நிறுத்தி விட்டு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அர்த்தமுள்ள பங்களிப்புக்களை வழங்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்களிடம் வலியுறுத்துகின்றேன்- இவ்வாறு நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

தனிநபர் வருமான வரி அறவீட்டில் நிவாரணங்களை வழங்குவதற்கு ஏதுவான திருத்தங்களை மேற்கொள்வது குறித்து கடந்த ஆண்டு சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடப்பட்டதாகவும், இருப்பினும் அப்போது உரிய வருமான இலக்குகள் எட்டப்படாததன் காரணமாக அதனைச் செய்வது சாத்தியமாகவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்த வருட நடுப்பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட வருமான இலக்குகள் உள்ளடங்கலாக பொருளாதாரத்தில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் அடையப்பட்டிருப்பதன் காரணமாக சர்வதேச நாணய நிதியத்தின் அனுமதியுடன் இந்த வரி நிவாரணத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவிருக்கும் பின்னணியில் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டிருக்கும் தனிநபர் வருமான வரிக்கட்டமைப்புத் திருத்தங்கள் தொடர்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையில், இதுபற்றி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் வழங்கியிருக்கும் விளக்கத்தில் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டின் பொருளாதார மீட்சிக்கு தாமும் பங்களிப்பு செய்ததாக ஐக்கிய மக்கள் சக்தி தற்போது கூறக்கூடும். ஆனால், அந்தக் காலப்பகுதியின் உண்மை நிலவரத்தை நினைவில் வைத்திருக்க வேண்டும். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகியதன் பின்னர், சஜித் பிரேமதாஸ தலைமையிலான குழுவினர் மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்கவுடன் பேச்சுகள் நடத்தினர். அதனைத்தொடர்ந்து ஹர்ஷ டி சில்வா அவரது "எக்ஸ்" தளப்பக்கத்தில் செய்த பதிவு, சவால்களை எதிர்கொள்வதிலிருந்து விலகிச்செல்லும் அவர்களது போக்கைக் காண்பிக்கின்றது

அடுத்ததாக தனிநபர் வருமான வரி அறவீட்டில் நிவாரணங்களை வழங்குவது குறித்து கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதல் சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுகளை முன்னெடுத்து வந்தோம். இருப்பினும் அவ்வேளையில் வருமான இலக்குகள் அடையப்படாததன் காரணமாக அத்தகைய நிவாரணங்களை வழங்குவது சாத்தியமானதாக இருக்கவில்லை. ஆனால், இவ்வருடத்தின் நடுப்பகுதியில் வருமான இலக்குகள் அடையப்பட்டுள்ளன. அரசாங்கம் சிறப்பாக செயல்பட்டதால் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றமடைந்துள்ளோம் - என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 16.09.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.